உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 27] கீலக - ஐப்பசி - 10—11—68 [இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

அஞ்சும் ஆறும்

'அஞ்சு முகம்தோன்றில் ஆறு முகம்தோன்றும்' என்பது, முருகன் துதிப்பாடல் ஒன்றின் அழகிய முதல் அடி. இதில் உள்ள முதல் அழகு, 'அஞ்சு, ஆறு' என்று அடுக்கி வந்த எண் அலங்காரம். இரண்டாவது அழகு, 'அஞ்சு' என்னும் எண்ணுப்பெயர், சிலேடை ஒட்டாய், 'அஞ்சுதல்' என வேறொரு பொருளைத் தந்து நிற்றல். மூன்றாவது அழகு இவ்வொட்டுப் பொருளால், 'முருகனுக்கு அடியராய் உள்ளார்க்கு எவ்வகையிலேனும், எத்துணையேனும் அச்சம் தோன்றுமாயின், அவ்விடத்தில் அவனது ஆறுமுகங்களும் வெளிநின்று அவ்வச்சத்தைப் போக்கிக் காக்கும்' என்று உணரப்படுகின்ற அவனது அருட்டிறத்தின் சிறப்பு. இவையே மேற்காட்டிய தொடரால் நாம் அறிவன எனினும், மற்றொரு பொருளும் திருவருட் செயலாக

அத்தொடரில் அமைந்து விளங்குதல் காணலாம். அஃது, 'அஞ்சுமுகம் தோன்றினாலே ஆறுமுகம் தோன்றும்; இல்லையாயின், தோன்ற வழியில்லை' என்பதாம். இப்பொருட்கு 'தோன்றிலே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுக்கப்பட்டதாக உரைக்கப்படும்.

ஐந்து திருமுகங்களை உடையவன் சிவபெருமான்; ஆறு திருமுகங்களை உடையவன் முருகப்பெருமான். 'சிவபெருமானிடமிருந்தே முருகப்பெருமான் தோன்றினான்' என்பதை எடுத்துச் சொல்லத் தேவையில்லை. ஆகவே, 'அஞ்சு முகம் உடைய சிவபெருமான் தோன்றினாலல்லது, ஆறுமுகம் உடைய முருகப்பெருமான் தோன்ற வழிஇல்லை' என்பது முற்றிலும் உண்மையேயாம்.

'ஐந்து' என்னும் எண்ணைவிட, 'ஆறு' என்னும் எண் பெரியது ஆதலின், ஐந்து முகங்களையுடைய சிவபெருமானைவிட, ஆறுமுகங்களையுடைய முருகப்பெருமான் பெரியவனாதல் வேண்டும் என்ற ஓர் வாதத்தைச் சிலர் எழுப்ப முன்வருவர். அவர்கள், 'ஆறு என்பது ஐந்தை நீக்கிவிட்டுப் பெரிதாகவில்லை; ஐந்தை முற்றிலும் கொண்டே பெரிதாகின்றது' என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். ஐந்தே, வேறொரு நிலையில் ஆறாகின்றதன்றி, ஐந்தைவிட்டு ஆறு தனியாக இல்லை. அது போல சிவபெருமானே மற்றொரு நிலையில் முருகனாய் விளங்குகின்றானன்றி சிவபெருமானைவிட்டு முருகன் தனியாக இல்லை என்பதே முருகனை உயர்நிலையில் வழிபடுவோர் கொண்ட கொள்கை. இக்கருத்துப் பற்றியே 'பிறப்பில் பெருமான்' எனச் சிவபெருமானுக்குச் சொல்லப்பட்ட இயல்பை, 'பெம்மான் முருகன் பிறவான் இறவான்' என முருகனுக்குக் கூறினார் அருணகிரிநாதர்.

கந்தபுராணம அருளிச்செய்த கச்சியப்ப சிவாசாரியரைவிட, வடமொழி தென்மொழி வைதிக நூல்களில் வல்ல சிறந்த முருகனடியார் பிறர் இலர். அவ்வாறே அவர் அருளிச் செய்த கந்தபுராணத்தைவிட முருகனது பெருமையை விளக்கும் நூலும் பிறிதொன்று இல்லை. அத்தகைய கச்சியப்ப சிவாசாரியர் தமது கந்தபுராணத்தில் 'முருகன் சிவபெருமானேயன்றி வேறொருவன் அல்லன்' என்பதைப் பல இடங்களில் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறுகின்றார். அவற்றுள் ஓரிடத்தில், 'முருகன் சிவபெருமானே என்பதை அவனது ஆறுமுகங்களைக் கொண்டே உணரலாம்' என்கின்றார்.

"ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன்காண்!
ஆசில் ஆங்கவன் அறுமுகத் துண்மையால் அறிநீ;
பேசில் ஆங்கவன் பரனொடு பேதகன் அல்லன்;
தேசுலா அகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்"

என்பது அப்பாட்டு. இதில், 'சிவபெருமானுக்கு யாவரும் அறிய உள்ள முகம் ஐந்தாயினும், உண்மையில் அவனுக்கு உள்ள முகம் ஆறே' என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது. முருகன் திருவவதாரம் கூறுமிடத்தில், 'சிவபெருமானது ஆறுவது முகமாகிய அதோமுகம் ஞானிகளால் மட்டுமே உணரப்படும்' என்பதை, ''அறிஞராயோர் சித்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்'' என்று வெளிப்படையாகவே கூறியருளினர். 'காரியத்தில் உள்ளது காரணத்திலும் உண்டாகும்' என்பது நியமமாகலின், சிவபெருமானிடத்தில் தோன்றிய முருகனுக்கு ஆறுமுகம் உளது என்றால், சிவபெருமானுக்கும் ஆறுமுகம் இருத்தல் இயல்பே. எனினும் அது சிவபெருமானிடம் எளிதில் காணப்படாததாயும், முருகப் பெருமானிடம் எளிதில் காணப்படுவதாயும் உள்ளது. இவ்வளவே வேறுபாடு.

மேற்கூறிய பாட்டில் வீரவாகுதேவர் கூற்றில் வைத்து இவ்வாறு கூறிய கச்சியப்ப சிவாசாரியர், இதற்கு முன்பே, சிவபெருமான் உமாதேவிக்குக் கூறுவதாக அமைந்த பாட்டில்,

"ஆதலின் நமது சத்தி அறுமுகன்; அவனும் நாமும்
பேதகம் அன்றால்"

எனவும்,

"நன்முகம் இருமூன் றுண்டால் நமக்கு; அவைதாமே கந்தன்
தன்முக மாகி உற்ற"

எனவும் கூறினர். 'சிவபெருமான் தனது அளவிலாற்றலால் கொள்ளுகின்ற பலவடிவங்களுள், ஒன்றே, முருகனைக்கொண்ட வடிவம்' என்பதை, 'நமது சத்தி அறுமுகன்' என்பதனால் விளக்கினர். சிவத்தைவிட்டுச் சத்தி இல்லையாகையால், சிவனை விட்டு முருகனும் இல்லை என்பது தானே பெறப்படுகின்றது. இன்னும், 'பிரணவத்தோடு சொல்லப்படும் சிவபெருமானது பஞ்சாக்கரமே முருகனது சடக்கரமாயிற்று' என்று பின்வரும் அடிகளாற் கூறினர்; தாரகப்பிரமமாகி - முன்மொழிகின்ற நந்தம் மூவிரண் டெழுத்தும் ஒன்றாய் உன்மகன நாமத் தோரா றெழுத்தென உற்ற அன்றே

இங்ஙனம் சிவபெருமானும் முருகனும் ஒருவரே; இருவ ரல்லர்' என்று வற்புறுத்திய அவர் இருவரல்லராயினும். இருவராகக்கொண்ட கோலத்திற்கேற்ப முருகன் சிவபெருமானை வழிபட்டுப் பயன் பெற்ற வரலாறுகள் சிலவற்றைக் கூறி யுள்ளார். எவ்விடத்திலும், சிவபெருமான் ஒருவனே முழு முதற் கடவுள்' என, உயர்ந்தோர் அனைவரும் ஒருங்குடன் பட்ட சிவபரத்துவத்திற்கு மாருக, ஓரிடத்தும் ஒருவார்த்தையும் கச்சியப்ப சிவாசாரியர் கூருத அருமை, அறிந்து பயன்கொள்ளற் பாலது. சிவபெருமான் முருகனைப் பிரணவப் பொருள் கேட்ட இடத்திலும் முருகன், 'நாம் ஆசாரிய நிலையில் இருக்க, நீர் மாணவ நிலையில் இருந்து கேட்டல் வேண்டும்' எனக் கூறியதாகக் கூருமல், நீர் அம்மைக்கு ஒருவரும் அறியாமல் மறையிற் கூறிய அப்பொருளை யாவரும் கேட்க வெளிப்படை யாகக் கூறலாமோ' எனக் கூறினன் என்றும், அதற்குச் சிவபெருமான் மகிழ்ந்து முருகனைத் தமது துடையின்மேல் இருத்தித் தமது செவி முருகன் வாய்மலரோடு சேருமாறு சாய்த்தருளினர் என்றுமே கூறியுள்ளார். இத்தகைய உயர்ந்த மேற்கோள்களுக்கு மாருகச் சிலர் முருகன், சிவபெருமான் இவரிடையே உயர்வு தாழ்வு கற்பிக்க முயல்வார்களேயானல்' அவர்கட்கு நாம் கூறத்தக்கது ஒன்றும் இல்லை. ஏனையோர் எவராயினும் அவரைச் சிவபெருமானினும் மேலானவராகக் கருதுதல், "பெற்ற தந்தையை விடுத்து வேறு தேடுவான் தன்மை" என்று அக் கச்சியப்ப சிவாசாரியரே ததீசிமுனிவர் கூற்ருக ஓரிடத்தில் கூறியுள்ளார். ஆதலின், ஐந்து, ஆறு' என்னும் திருமுகங்கள் பற்றியும், பிற பற்றியும் அறியற்பாலன வற்றை அவரது நெறிநின்று அறிதலே நேரிதாம். அருணகிரி நாதர், "நாதா, குமராநம என்று அரனர் - ஓதாய் என ஓதியது எப்பொருள்" என்ற இடத்தில், சிவபெருமான் நமோந்தமான ஆறெழுத்தால் முருகனைப் போற்றினர் எனக் கூறியது, "வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்பாதா, குறமின் பதசேகரனே', என்ற இடத்தில், பிரமன் முதலியோர் சிரமேற்கொள்ளும் பாதங்களையுடைய முருகன், வள்ளி பாதத்தை சிரமேற்கொள்ப வன்' எனக் கூறினுற் போல்வதொரு புனைந்துரை நலனேயன்றி வேறில்லையாதலின், அதுபற்றி ஐயம் இல்லை என்க.

'சிவபெருமான் பிறப்பு இறப்புக்கள் இல்லாத முதல்வன்' என்பது எல்லா நூல்கட்கும் ஒப்ப முடிந்த ஒன்று. "பெம்மான்

முருகன் பிறவான் இறவான்'' (கந்தர் அனுபூதி - 12) என்னும் அருள் வாக்கினால், 'முருகனும் அத்தகையவனே' என்பது இனிது விளங்கும். ஆகவே, சிவபெருமானும், முருகனும் தோன்றுதல் என்பது, பிறகாரணங்கள் ஒருங்கு தொக்க தொகைநிலையால் தோன்றாது, தாமே தம் அருள் காரணமாக, 'உருவும், பெயரும் இல்லாத ஒருபெரு நிலையினின்றும் நீங்கி, உருவும், பெயருங் கொண்டு காட்சியளித்தல்' என்பதேயாம்.

அங்ஙனம் காட்சியளிக்கும்பொழுது, சிவபெருமான் ஐந்து திருமுகங்களை உடையவனையும் முருகப்பெருமான் ஆறு திருமுகங்களை உடையவனையும் காட்சி வழங்குவர். ஐந்து திருமுகங்களை உடையவனுக்குச் சிறந்த மந்திரம், ஐந்தெழுத்தால் ஆகியது. ஆறு திருமுகங்களை உடையவனுக்குச் சிறந்த மந்திரம் ஆறெழுத்தால் ஆகியது. இன்னும் ஐம்முகப்பரமனுக்கு நம் தமிழகத்தில், 'பஞ்ச பூதத்தலம்' என்கின்ற ஐந்து தலங்கள் சிறந்தெடுத்துச் சொல்லப்படுகின்றன. அவ்வாறே அறுமுகப் பரமனுக்கு ஆறு படைவீடுகள் சொல்லப்படுகின்றன. ஆறு படைவீடுகளும் பழந்தமிழ் நூலாகிய திருமுருகாற்றுப்படையுள் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள், 'திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல்' என்னும் ஐந்தும் தனித்தனியாக எடுத்தும், ஆறாவதாகிய பழமுதிர்சோலை உடம்பொடு புணர்த்தும சொல்லப்பட்டன. 'குன்றுதோறாடல்' என்பது ஒருதலம் அன்றிப் பலமலைகளையும் குறிப்பதாயினும், அவையனைத்தும் தொகுத்து ஒன்றாகச் சொல்லப்படுகின்றன என்பதை, "ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்தும அன்பினுடன் - கூறும் அவர் சிந்தை குடிகொண்டோனே'' என்ற குமரகுருபரர் வாக்கு வலியுறுத்துகின்றது 'ஆடல்' என்பது விளையாட்டு. பிள்ளைகள் விளையாட்டினும் காளையரது காதல் விளையாட்டுச் சிறப்புடையது. அதனை முருகப்பெருமான், செருத்தணிந்து சென்ற தணிகை மலையில் நின்று செய்த காரணத்தால், திருத்தணிகையைக் குன்றுதோறாடலில் முதன்மையாகக் குறித்தல் உண்டு.

கந்தபுராணம் அருளிச்செய்த கச்சியப்ப சிவாசாரியர், ஆறு படைவீடுகளையும் ஆறு பாடல்களில் தனித்தனியே குறித்துப் போற்றியுள்ளார். மேலும்,

"மேவரும் கூடல் மேலை
வெற்பினில், அலைவாய் தன்னில்.
ஆவினன் குடியில் நல்ஏ
ரகந்தனில், தணிகை யாதிப்
பூவுல குள்ள வெற்பில்,
பொற்புறும் ஏனை வைப்பில்
கோவில்கொண் டருளி வைகும்
குமரகோட் டத்து மேயோன்"

என்று ஒருபாடலிலே அனைத்தையும் குறிக்கின்றார். இதனுள், குன்றுதோறாடலைக் குறிக்குமிடத்தில், 'தணிகையாதி வெற்பு' எனத் திருத்தணிகையை முதன்மையாகக் குறித்திருத்தல் கருத்தில் கொள்ளத்தக்கது. பழமுதிர் சோலையைத் தனியாகக் கூறாது, "பொற்புறும் ஏனை வைப்பு" எனப் பலவற்றோடு சேர்த்துக் கூறியது, திருமுருகாற்றுப் படையுள் அத்தலத்தைக் குறிக்குமிடத்து, 'ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்" என்பது முதலாக எடுத்துக்கூறிய பலவற்றையும் உடன்குறித் தற்பொருட்டாம். எனவே ஐம்முகப் பரமனிடத்து அன்புடையோர், அவன் எழுந்தருளியிருக்கும் அனைத்துத் தலங்களையும் கண்டு வணங்காவிடினும், 'பஞ்ச பூததலம்' எனப்படும் ஐந்து தலங்களைக் கண்டு வணங்கி, ஐந்தெழுத்தை அன்பினுடன் ஓதுதல் இன்றியமையாததுபோல, அறுமுகப் பரமனிடத்தில் அன்புடையோர் பலரும் அவனது அனைத்துத் தலங்களையும் கண்டு வணங்காவிடினும் தணிகை, பழமுதிர்சோலை உள்ளிட்ட ஆறு திருப்பதிகளையேனும் கண்டு வணங்கி, அவனது ஆறெழுத்தை அன்பினுடன் ஓதுதல் இன்றியமையாததாம்.

அறுமுகனுக்குரிய தலங்களும், எழுத்தும் ஆறானாற்போல, அவனைக் குறித்த சிறந்த நோன்பு நாட்களும் ஆறேயாம். அவை ஐப்பசித்திங்களில் வளர்பிறை முதல் நாள் முதலிய மகா சஷ்டி நாட்களாகிய ஆறு நாட்களாம். அந்நாட்களில் நோன்பிருத்தலும், அவனது தலங்களைக் கண்டு வணங்குதலும், அவனது புராணத்தைப் படித்தலும் கேட்டலும், இயன்ற அளவில்செய்யத் தக்கன. அங்ஙனம் செய்பவர்க்கு எவ்விடத்தில் எவ்விடர் தோன்றினும், அவ்விடத்தில் ஆறுமுகன்தோன்றி அவ்விடர்களைப் போக்கி அவரைக் காப்பதுடன், இம்மை மறுமை நலங்கள் பலவற்றையும் இனிது அருள்வான். அண்மையில் வந்த அந்த நன்னாளில் அத்தகைய நற்செயல்கள் பலவற்றையும் செய்து, நலம் பல பெற்ற அனைவரும், என்றும் அவ்வறுமுக வள்ளலை மறவாது அருள்வெள்ளத்தில் திளைப்போமாக.

குருவருள்

அறநெறியும் அருள்நெறியும்

"அறவாழி அந்தணன்"

'இறைவன், அளவிலாற்றல் உடையவன்' என்பதைக் குறிக்க, அவனை, "தனக்குவமை யில்லாதான்" எனக் கூறிய திருவள்ளுவர், பின்பு அவனை, "அறவாழி அந்தணன்" எனக் கூறுகின்றார். இதனுள் "ஆழி" என்றதற்கு, 'கடல்' என்பது பொருளாகும். சிலர் இதற்கு, 'சக்கரம்' எனப் பொருள்கொண்டு, 'தரும சக்கரத்தை உடைய அந்தணன்' என்று புத்தமதக் கடவுளைக் குறித்ததாக உரைப்பர். அது பொருந்துமாறில்லை ஏனெனில் திருவள்ளுவர் யாதொரு சமயக் கடவுளையும் சிறப்பாக எடுத்துத் தமது நூலில் கூறவில்லை என்பதை முன்னமே கூறினோம். அதுவன்றி, அவ்வுரை பொருந்தாமைக்கு மற்றும் ஒரு சிறந்த காரணம் உண்டு.

திருவள்ளுவர், "அறவாழி யந்தணன்" எனக் கூறிய திருக்குறளை முழுதும் நோக்கவேண்டும். "அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால் – பிறவாழி நீந்தல் அரிது" என்பது அக்குறள். 'அற ஆழி, பிற ஆழி' என, 'ஆழி' என்னும் சொல் இருமுறை வந்துள்ளது. அவைகளில் இரண்டாவதாக வந்துள்ள, 'ஆழி' என்பதற்கு, 'கடல்' என்பதே பொருளன்றி வேறில்லை' என்பது தெளிவாக விளங்குகின்றது. எவ்வாறெனில் "பிற ஆழி நீந்தல் அரிது" என்று, 'நீந்தல்' என்னும் சொல் வந்திருப்பதால், அதற்குத் தக்க பொருள் கடலாவதன்றிச் சக்கரமாகாது. அதனால், இரண்டாவதாக உள்ள, 'ஆழி' என்பதற்கு, 'கடல்' என்பதே பொருளாம்.

இனி அக் கடலுக்கு, "பிற" என்ற அடைமொழி கொடுத்து 'பிற ஆழி' எனப்பட்டது. 'பிற ஆழி' என்பதற்கு, 'மற்றைய கடல்கள்' என்பது பொருள். 'மற்றைய கடல்கள்' எனக் கூறினமையால், அதற்குமுன் யாதேனும் ஒரு கடல் சொல்லப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில், 'மற்றை

யது' என்னும் சொல், முன்பு சுட்டப்பட்ட பொருளின் இனப் பொருளையே குறிக்கும் என்பது இலக்கணமாதலின்.

''மற்றைய தென்னுங் கிளவி தானே
சுட்டுநிலை ஒழிய இனங்குறித் தன்றே''
(தொல்காப்பியம்)

''மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்'' (நன்னூல்)

என்ற இலக்கணச் சூத்திரங்களைக் காண்க.

'பிற ஆழி' என்பதற்கு இனமாக முன்பு சுட்டப்பட்ட ஆழி எது என்று நோக்குமிடத்து, ''அற ஆழி'' என்பதே உள்ளது. ஆகவே, 'பிற ஆழி'' என்றது, 'பிற கடல்' என்றே பொருள் தருதலால், ''அற ஆழி'' என்பதும் 'அறக் கடல்' எனப் பொருள் தருதலன்றி, வேறு பொருள் தருதல், இயலாது. அதனால், ''அறவாழி யந்தணன்'' என்பதற்கு, 'தரும சக்கரத்தை உடைய அந்தணன்' என்று உரைப்பது பொருந்தா உரையாம். ஆகவே, ''அறவாழி அந்தணன்'' என்பதற்கு, 'அறக்கடலாகிய அந்தணன்' என்பதே பொருளாயிற்று. அப்பொருளையே பரிமேலழகர் உரைத்திருக்கின்றார்.

'இறைவன் அறக் கடலாய் இருக்கின்றான்' என்றால், என்ன பொருள்? தமிழ் கற்ற ஒருவரைச் சுட்டிக் காட்டி, 'இவர் தமிழ்க் கடல்' என்று கூறினால் என்ன பொருள்? தமிழ் முழுதும் அவரிடம் அடங்கியுள்ளது என்பதே பொருள். அதுபோலத்தான், இறைவனை, 'அறக் கடல்' என்று சொன்னால், 'அறம்' என்று சொல்லப்படுவன பலவும் அவனிடத்தில் அடங்கிக் கிடக்கின்றன என்பதே பொருளாம். இறைவன் அறத்தின்வழி அடையப்படுபவனன்றி, மறத்தின்வழி அடையப்படுபவன் அல்லன். அதனால் அறம் இறைவனுக்கு வடிவமாகச் சொல்லப்படுகின்றது. 'அறக் கடல்' என்றதனால், எல்லா வகையான அறங்களையும் இறைவன் தனக்கு வடிவமாகக் கொண்டு நிற்கின்றான் என்பது விளங்கும். இதுபற்றியே கடவுளை, 'புண்ணிய சொரூபி, புண்ணியன், புண்ணிய மூர்த்தி' என்றெல்லாம் சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. இப் பொருளையே 'அறவாழி' என்பது குறிக்கின்றது என்க.

இனி, 'அந்தணன்' என்பது, 'அம்+தணன்' எனப் பிரிக்கப்பட்டு, 'அழகிய தட்பத்தை உடையவன்' என்று பொருள் உரைக்கப்படும். அதனை இக் குறள் உரையில் பரிமேலழகர் கூருவிடினும், "அந்தணர் என்போர் அறவோர்" என்னும் குறள் உரையில் கூறியுள்ளார். இதற்குப் பரிமே லழகர் உரை வேண்டுவதும் இல்லை. ஏனெனில், திருவள்ளு வரே அதனை, "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க் கும் - செந்தண்மை பூண்டொழுக லான்" என்று இனிது விளங்கக் கூறியுள்ளார் அஃதாவது, 'அந்தணர் என்னும் பெயர் எவ்வுயிர்களிடத்தும் செந்தண்மையை உடையவரையே குறிக்கும்' என்று கூறியுள்ளார். 'தண்மை, தட்பம்' என்ப வற்றிற்கு, 'குளிர்ச்சி' என்பது பொருள். அது கருணை அல்லது அருள் என்பதைக் குறிக்கும்.

அறத்திற்குக் காரணம் இரண்டு: ஒன்று அன்பு; மற் ருென்று அருள். 'அன்பு' என்பது, யாதேனும் ஒரு தொடர்பு பற்றி ஒருவர்க்கு மற்றவரிடத்தில் தோன்றும் உள்ள உருக்கம். 'அருள்' என்பது அஃதில்லாமலே தோன்றும் உள்ள உருக்கம். அன்பு காரணமாக உண்டாகின்ற அறத்தைவிட, அருள் காரணமாக உண்டாகின்ற அறம் சிறப்புடையது. அதனுல், 'இறைவன் அருள் காரணமாகவே அற வடிவினனுய் விளங்கு கின்ருன்' என்பதைக் குறிக்க, இறைவனை "அறவாழி" எனக் கூற வந்த திருவள்ளுவர், "அந்தணன்" என்பதையும் உடன் கூறினுர்.

ஒருவனை, 'அறவடிவினன்' அல்லது 'புண்ணிய சொரூபி' எனக் கூறுதல், இரண்டு காரணங்கள் பற்றி உளதாகும். ஒன்று, மறமாகிய பாவம் ஒன்றேனும் செய்யாது. அறங்கள் அனைத்தையும் முற்றச் செய்தல் பற்றியும். மற்ருென்று அறம் செய்யாது மறம் (பாவம்) செய்வாரைத் துன்பததிரகு உள் ளாக்கி ஒறுத்து, அறம் செய்வாரைத் துன்பத்தினின்றும் எடுத்து இன்பத்தில் வாழச்செய்து அளித்தல பற்றியுமாம். இவ் விரண்டில் முதற்கண் சொல்லிய காரணம் பற்றி ஒருவரை 'அறவாழி' எனக் கூறுதல் மக்களில ஒருவராய் உள்ளவ ரிடத்தே நிகழ்வது. இறைவனை 'அறவாழி என்றல். இரண்டாவதாகக் கூறிய காரணம் பற்றியேயாம் ஆகவே, அறம் இறைவனுக்கு வடிவம் (உருவம்) என்ருல், அறததிற்கு

உயிராய் இருப்பவன் இறைவன் என்பது தானே பெறப்படு கின்றது. இறைவன் அறத்திற்கு உயிராய் இருத்தலாவது, 'இன்னதே அறம்; இதனைச் செய்க' எனவும், 'இன்னது மறம்; இதனைச் செய்யற்க' எனவும் அற நெறியை வகுத்த லும், அந் நெறியின் ஒழுகுவார்க்கு அருளும், அதில் தவறு வார்க்கு ஒறுப்பும் தருதலுமாம். உயிர் உடம்பை இயக்குதல் போல, இறைவன் இவ்வாறு அறத்தை நடத்துதல் பற்றியே, 'பல்வேறு வகைப்பட்ட அறங்கள் எல்லாவற்றையும் தனக்கு வடிவாக உடையவன்' எனச் சொல்லப்படுகின்றான். இவ் வாறு இறைவன், அறத்தை வகுத்தற்கும், அதனைக் குறை படாது நடத்துதற்கும் காரணம், உயிர்களிடத்து வைத்த கருணையேயன்றிப் பிறிதில்லை யாதலின், அவன் அந்தணனு மாகின்றான். எனவே பிறர் அந்தணராதல் அறத்தைச் செய்வ தனால் என்பதும், இறைவன் அந்தணனாதல் அறத்தை நடத்து வதனால் என்பதும் விளங்கும்.

அறம் அறிவற்ற பொருளாதலின் அது தானே நடவாது; அஃதாவது, ஒருவர் செய்யும் நல்ல செயல்களே அவர்கட்கு நன்மையையும், தீய செயலே அவர்கட்குத் தீமையையும் தந்துவிடமாட்டா. தந்துவிடும் எனின், அரசியல் முறையில் தவறாது நடக்கும் குடிமக்கட்கு அதற்குரிய பரிசில் முதலிய வற்றையும், தவறி நடப்பவர்க்குச் சிறை முதலிய தண்டத்தை யும் அந்தச் சட்டமே தந்துவிடவேண்டும். அவ்வாறின்றி அவற்றிற்குரிய அதிகாரிகளே அதனைச் செய்யக் காண்கின்றோம். அறம், மறம் என்பவைகளும் அத்தன்மையனவே யாதலால், அவைகளே தம்மைச் செய்தவர்களுக்குத் தம் பயனைத் தரும் எனக் கூறுதல், அறியாமையின்பாற்பட்டதேயாகும். ஆகவே, அறம் தானே நடவாது, இறைவன் நடத்தவே நடப்பதாகும். இதனைத் திருவள்ளுவர், 'ஊழ்' என்னும் அதிகாரத்தில் "வகுத்தான் வகுத்த வகை" என்பதனாலும், 'இரவச்சம்' என்னும் அதிகாரத்தில், "உலகியற்றியான்" என்பதனாலும் குறிக்கின்றார். ஆகவே, அவர் இங்கு இறைவனை 'அறவாழி' என்றது அறத்திற்கு உயிராய் நின்று அதனை இயக்குதல் பற்றியே என்பது தெளிவாகின்றது.

'இறைவன் அறத்தை இயக்குபவன்' என்பதைக் குறிப் பிடுவதே, சைவ சமயத்தில் இறைவனுக்குச் சொல்லப்படுகின்ற விடை ஊர்தி. 'அறம் வெண்மை நிறம் உடையது' எனவும்,

'மறம் (பாவம்) கருமை நிறம் உடையது' எனவும் கூறுதல் வழக்காதலின், அதுபற்றியே இறைவனுக்கு ஊர்தியாயும், கொடியாயும் அமைந்த விடை, 'வெள்விடை' எனச் சொல்லப் படுகின்றது. "ஊர்தி வால்வெள் ளேறே; சிறந்த - சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப" என்று, புறநானூற்றுக் கடவுள் வாழ்த்திலும் சொல்லப்பட்டது.

'அறமே இறைவனுக்கு விடை ஊர்தியாய் நின்று சுமப்ப தாயிற்று' என்பதற்குரிய புராண வரலாற்றைக் கந்தபுராணம் ததீசி உத்தரப் படலத்திற் காணலாம். சிவாலயங்களில் முன்னே உள்ள விடை அறக்கடவுளே (தருமதேவதையே). 'அது கிரேதாயுகத்தில் நான்கு பாதங்களாலும், திரேதா யுகத்தில் மூன்று பாதங்களாலும், துவாபர யுகத்தில் இரண்டு பாதங்களாலும் நடந்து, இக் கலியுகத்தில் ஒருபாதத்தால் நடக்கின்றது' என்ற முறையிலேதான் அதன் வடிவம் சிவால யங்களில் அமைந்துள்ளது. இவையெல்லாம் எதனைக் காட்டு கின்றன? 'அறத்தை இறைவனே அந்தணனாய் நின்று நடத்துகின்றான்' என்பதையே காட்டுகின்றன. ஆகவே இறைவன் அறவடிவினனாய் இலங்குகின்றான் என்பதில் ஐயம் இல்லை.

'இறைவன் அறவடிவினன் என்பதை, 'அறவன், புண்ணி யன், புண்ணிய மூர்த்தி' முதலிய சொற்களால் திருமுறைகள் பல இடங்களில் கூறுதலைக் காணலாம். இன்னும் திருஞான சம்பந்தர், "இன்னஉரு, இன்னநிறம் என்றறிவதேல் அரிது; நீதி பலவும் - தன்னதுருவாம் என நிறைந்தவன் நீதியொடு தான் அமர்விடம்" என்பதில், 'இறைவன் அறங்கள் பலவற் றையும் தனக்கு வடிவமாகக் கொண்டுள்ளான்' என்று வெளிப் படையாகவே அருளியுள்ளார். மற்றும், திருமூல தேவர் தமது திருமந்திரத்தில்,

"பிறவா நெறிதந்த பேரரு ளாளன்,
மறவா அருள்தந்த மாதவன், நந்தி,
அறவாழி யந்தணன், ஆதிப் பராபரன்
உறவாகி வந்தென் உளம்புகுந் தானே"

என்று இறைவனை "அறவாழி யந்தணன்' என்றே அருளிச் செய்தார்.

அறம், 'பிறப்பைத் தருவது, பிறவாமையைத் தருவது' என இருவகைப்படும். அவற்றுள் முன்னையது, 'வினை' என்றும், பின்னையது, 'தவம்' என்றும் சொல்லப்படும். இவற்றுள் பின்னையதே சிறப்புடையது. 'இருவகை அறங்களையுமே இறைவன் தனக்கு வடிவாகக் கொண்டிருப்பினும், 'பிறவாமையைத் தருவதே அவனது குறிக்கோள்' என்பதை விளக்க, ''பிறவா நெறிதந்த'' என்றும், 'பிறப்பைத் தருவது அருளாக, பிறவாமையைத் தருவது பேரருளாம்' என்றற்கு, ''பேரருளாளன்'' என்றும், 'பிறவாமையைத் தரும் அறமாவது அவனை மறவாமை; அதுவே தவங்களிலெல்லாம் சிறந்த தவம், என்றற்கு, ''மறவா அருள் தந்த மாதவன்'' என்றும் அருளிச் செய்தார். எனவே, இறைவன் அறவாழியந்தணனும் முறையை எல்லாம் முன்னே விளக்கிப் பின்னே அத்தொடரை எடுத்துக் கூறியருளினுர் திருமூலர். சம்பந்தரும், ''நீதி பலவும் தன்ன துருவாம் என நிறைந்த தவன்'' என்று, தவத்தைக் குறிப்பிட் டுள்ளார்.

இவ்வாறு திருவள்ளுவர் இறைவன் அறமே வடிவின னுதலைக் கூறினுராயினும், அதற்குக் காரணமான பேரருளையும் 'அந்தணன்' என்னும் சொல்லாற் கூறியிருத்தலின், இறைவன் பேரருள் உடையன் என்பதைக் குறித்தலே கருத்தாயிற்று. மேற்காட்டிய திருமந்திரத்தில் திருமூலரும் இறைவன் பேரருளாளனுதலைக் கூறியிருத்தல் அறிந்து மகிழற்பாலது. ஆகவே, அறநெறியும், அருள்நெறியும் ஒன்றி நிற்கும் முறையை அறிந்து மக்கள் ஒழுகுவார்களாக.

குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யவும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது. ஆண்டுச் சந்தா ரூ. 3—00.

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர். T. M. குமரகுருபரன்பிள்ளை B.A., B.L. அவர்கள்
குமரகுருபரன் ஆபிஸ். ஸ்ரீவைகுண்டம்.

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 27, இதழ் 11, பக்கம் 512 இன் தொடர்ச்சி)

தவம்

மாணுக்கன் : சத்திநிபாதத்தின் பயனாக யாது நிகழும் ?

ஆசிரியர் : சத்திநிபாதத்தின் பயனாகத் தவம் நிகழும்.

மாணுக்கன் : தவம் என்பது எது ?

ஆசிரியர் : சிவபெருமானை நோக்கிச் செய்யும் செயல்களே தவமாகும். ஔவையாரும், " சிவத்தைப் பேணின் தவத்திற்கழகு " எனக் கூறுதல் காணலாம்.

மாணுக்கன் : சிவனை நினையாமலே, மனைவி மக்கள், பிற சுற்றத்தார், இடம், பொருள், ஏவல் ஆகிய எல்லாவற்றையும் முற்றத்துறந்து காட்டிற் சென்று, காய், கனி, கிழங்கு முதலியவற்றைப் புசித்துக் கொண்டு, மழைக் காலத்திலும் பனிக்காலத்திலும் நீரிலும், வெயிற்காலத்தில் நெருப்பின் நடுவிலும் நின்று செய்வது தவமாகாதோ ?

ஆசிரியர் : நீ கூறியவாறு எல்லாவற்றையும் துறந்து காட்டிற்சென்று, நீரிலும், நெருப்பிலும் நின்று எதைச்செய்வது? எல்லாவற்றையும் துறந்ததும், நீரிலும் நெருப்பிலும் நிற்பதும் உண்மை. ஆனல் அவ்வாறு நின்று செய்வது எதை ? உடம்பை வாட்டுவதைத்தான் செய்வதா ? வேறு ஏதேனும் நல்ல செயல் உண்டா ?

மாணுக்கன் : இந்நிலையை அடைந்தோர்கள் யாதொரு பாவத்தையும் செய்யாது விடுதலால், அது போதுமன்றோ !

ஆசிரியர் : பாவச் செயலைச் செய்யாதிருந்தால், பாவம் வாராது ஒழியும்; ஆனால், அதனால் புண்ணியம் வருமோ? புண்ணியத்தைப் பெறாமல், எந்த நன்மையை அடைய இயலும்?

மாணாக்கன் : ஆம்! புண்ணியம் இன்றி யாதொரு நன்மையையும் அடைதல் இயலாதுதான். அதற்காகத் துறவிகளும் எவையேனும் சிலவற்றைச் செய்யவே வேண்டும். அதற்கு இல்லறத்தாரிடம் பொருள் பெற்று யாகங்களைச் செய்தல், ஏழைகளுக்கு உணவளித்தல் முதலியவைகளைச் செய்யலாம். முனிவர்கள் பலர் அவ்வாறு செய்ததாக நூல்களிலும் சொல்லப்படுகின்றனவே.

ஆசிரியர் : இல்லறத்தாரிடம் பொருள் பெற்று இவைகளைச் செய்வதென்றால், இல்லத்தை ஏன் துறக்கவேண்டும்? மேலும் பிறர்கொடுத்த பொருளைக்கொண்டு செய்யும் நற்செயல்கள் அப்பொருளைக் கொடுத்தவர்க்குப் புண்ணியமாவதன்றிச் செய்வோர்க்குச் செய்கின்ற அவ்வளவிலன்றிப் பெரும்பயன் தருவதில்லை. ஆகவே, துறந்தோர் செய்யத்தக்கனவெல்லாம் கடவுள் வழிபாடு ஒன்றே. அதற்கு இடையூறாக மனத்தில் ஆசை கோபம் முதலியன தோன்றாதிருத்தற் பொருட்டும், அவை காரணமாகவும், பசி காரணமாகவும் பிற தொழில்களில் செல்லாதிருத்தற் பொருட்டுமே துறவிகள் எல்லாவற்றையும் துறந்து சென்று தனித்திருந்து, காய், கனி, கிழங்கு முதலியவைகளைப் புசித்துக்கொண்டு, காட்டில் உறைவர். ஆகவே 'தவத்தோர்' எனப்படுகின்ற துறவிகளது செயலாகிய கடவுள் வழிபாடே தவம் எனப்படுகின்றது என்பது தெளிவு.

இனி, 'கடவுளாவான் சிவபெருமானே; பிறர் ஒருவரும் அல்லர்' என்பது பதியியலில் நன்கு விளக்கப்பட்டது. அதனால், சிவபெருமானை நோக்கிச் செய்யும் செயலே தவமாதல் அறிந்து கொள்க.

மாணாக்கன் : சிவபெருமானையன்றியும், 'பலர் பிரமனை நோக்கித் தவம் செய்தனர், மாயோனை நோக்கித் தவம் செய்தனர், பிற பிற தேவரை நோக்கித் தவம் செய்தனர்' என்றெல்லாம் நூல்களில் சொல்லக் கேட்கின்றோமே; அவையெல்லாம் தவம் அல்லவோ?

ஆசிரியர் : "மேலைத் தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்" என்றார் ஔவையாரும். 'தவம் செய்து மகனைப் பெற்றார் அல்லது மகளைப் பெற்றார்' என்று உலகத்தார் கூறக் கேட்

கின்றோம். இவற்றால், நன்மையைத் தரும் புண்ணியங்கள் பலவும் பொதுவாக, 'தவம்' என்று சொல்லப்படுதல் விளங்கும். சிவபெருமானைத் தவிர்த்துப் பிற தேவரை நோக்கிச் செய்யும் தவங்களும் இப்படிப்பட்ட பொதுத் தவங்களேயன்றிச் சிறப்புடைய உண்மைத் தவங்கள் அல்ல.

மாணாக்கன் : 'சிவபெருமானை நோக்கிச் செய்யும் செயல்களே சிறந்த தவம்' என்பதும், 'மற்றைய தேவரை நோக்கிச் செய்யும் செயல்கள் அத்தகையன அல்ல' என்பதும் எங்ஙனம்?

ஆசிரியர் : தவம் செய்வது துன்பத்தை நீக்கிக் கொள்ளுதற்கும், இன்பத்தைப் பெறுதற்குமாகும். துன்பங்கள் எல்லாவற்றிலும் மிகப்பெரிய துன்பம் பிறவித்துன்பம். இன்பங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரிய இன்பம் முத்தி இன்பம். இந்தப் பிறவித் துன்பத்தைப் போக்குபவனும், முத்தியின்பத்தைத் தருபவனும் சிவபெருமான் ஒருவனேயன்றி வேறொருவரும் இலர்.

" அவன் அவள் அதுஎனும் அவைதொ றொன்றும்இச்
சிவனலால் முத்தியிற் சேர்த்து வார்இலை ;
துவளரும் இம்முறை சுருதி கூறுமால் ;
இவனடி வழிபடின் முத்தி எய்துவாய் "

" மானுடன் விசும்பைத் தோல்போல் சுருட்டுதல் வல்லனுயின்,
ஈனமில் சிவனைக் காண தீடும்பைதீர் வீடும் எய்தும் ;
மானமார் சுருதி கூறும் வழக்கிவை ஆதலாலே,
ஆனமர் இறையைக் காணும் உபாயமே
அறிதல்வேண்டும் "

என்பன காஞ்சிப் புராணத்துட் சொல்லப்பட்டவை. இவற்றுள் பின்னர்க் கூறிய பொருள்,

" பரசிவன் உணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையும் என்றும்
விரவிய துயர்க்கீ றெய்தும் வீடுபே றடைதும் என்றல்,
உருவமில் விசும்பிற் றோலை உரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை பேசிற் றென்னில் பின்னுமோர்
சான்றுமுண்டோ "

எனக் கந்தபுராணத்திலும் சொல்லப்பட்டது. காஞ்சிப்புராணத்திலும், கந்தபுராணத்திலும், ஒரு படித்தாகச் சொல்லப்பட்ட சுருதியாவது

" यदा चर्मवदाकाशं वेष्टयिष्यन्ति मानवाः
तदा शिवमविज्ञाय दुःखस्यान्तो भविष्यति "

என்னும் சுவேதாச்சுவதர உபநிடத வாக்கியமாகும். இன்னும் துன்பத்தை ஓட்டுகின்ற காரணம் பற்றியே 'ருத்ரன்' என்ற பெயரும், இன்பத்தைத் தருகின்ற காரணம் பற்றியே, 'சங்கரன், சம்பு' என்ற பெயர்களும் சிவபெருமானுக்குச் சொல்லப்படு கின்றன. சிவபெருமான் ஒருவனே பிறவித் துன்பத்தை நீக்கி, முத்தியின்பத்தைத் தருபவனாய் இருத்தற்குக் காரணம், அப் பெருமான் ஒருவனே பிறப்பின்றி இருப்பதாம். சிவபெருமான் தவிர ஏனையோர் யாவரும் பிறவி உடையவராகையால், அவர் தம்மை யடைந்தோரைப் பிறப்பு நீக்கி முத்தியிற் சேர்க்குமா றில்லை. பிற பிற பயன்களையேனும் பிற தேவரிடமிருந்து பெறு தல் கூடும்; முத்தியைச் சிவபெருமானிடமிருந்துதான் பெற முடியும். இது பற்றியே, 'சிவபெருமான் முத்தியைத்தான் தரு வான்; மற்றெதனையும் தரமாட்டான்' எனச்சிலர் தவறாக நினைத்துக்கொள்கிறார்கள். பிறர் ஒருவராலும் தர இயலாத மிகப் பெரும் பேறாகிய முத்தி இன்பத்தையே (மோட்ச சாம் ராஜ்யத்தையே) தன் அடியார்களுக்குக் கொடுக்கின்ற பெரு மான், 'ஏனைய சிறு பயன்களைக் கொடுக்கமாட்டான்' என நினைப்பது எத்துணை அறியாமை எனச் சொல்லத் தேவை இல்லை. ஆகவே. முத்தியின்பத்திற்கு வாயிலாவன, சிவனை நோக்கிச்செய்யும் செயல்களேயாதலின், அவையே உண்மைத் தவம் என உணர்க.

பிற நற்செயல்கள் முத்தியைத் தவிரப் பிற பயன்களையே தருவன ஆதலாலும், அப்பயன்கள் யாவும் நிலையாது, சின்னாள் இருந்து அழிவன ஆதலாலும் அத்தவங்கட்கு அழிவு உண்டு. சிவபெருமானை நோக்கிச்செய்யும் செயல்கள் வேறு பயன்களை யும் தருமாயினும், அதனோடு ஒழியாது, முத்திக்கு ஏதுவாயும் நிற்கும். அதனால் அவற்றிற்கு அழிவு இல்லை. இதுபற்றி இவற்றை, " இறப்பில் தவம் " எனக் கூறுகின்றார் மெய்கண்டார்.

சிவபிரான் ஒருவனே பதி; ஏனை யாவரும் பசுக்கள். அதனால் சிவபிரானை நோக்கிச் செய்யப்படும் நற்செயல்கள், 'பதிபுண்ணியங்கள்' எனப்படும். சிவபிரானை நோக்கிச் செய்யப் படுதலால், இவை, 'சிவபுண்ணியம்' எனப் பெயர் பெறுதலும் இயல்பே. சிவபிரானைத் தவிர்த்து ஏனையோர் யாவராயினும் அவரை நோக்கிச் செய்யப்படும் புண்ணியங்கள் பசுபுண்ணியங்க ளாம். பதிபுண்ணியங்களாகிய சிவபுண்ணியங்களே அழிவின்றி

நின்று முத்தியைத் தருவன, பசுபுண்ணியங்கள் அவ்வாறின்றித் தமக்குரிய சில பயன்களைத் தந்து அழிவெய்தும். அவை அழிய, அவற்றின் பயன்களும் அழிந்தொழியும். அதனால், அவற்றைச் செய்தாரை மீளவும் துன்பங்கள் வந்து பற்றும். ஆகவே, பசுபுண்ணியங்களைச் செய்தல் இவ்வுலக உணவை உண்டு பசி தணிதல்போல்வதாம். ''பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும் - இசைந்து வருவினையில் இன்பம்'' என்பது மெய்கண்டார் வாக்கு.

இவ்வுலக உணவுகள், உண்டபின்னர்ச் சிறிதுபொழுது நின்று பசியைத் தடுத்திருந்து, பின் அழிந்தொழியும். அவை அழிந்தொழியின், மீளவும் பசிவந்து பற்றும். இவை போல்வனவே பசுபுண்ணியங்கள். தேவர் உலக உணவாகிய அமுதத்தை உண்டால், அஃது அழிவதில்லை. அது பசியைப் போக்குதலேயன்றி, நரை, திரை, மூப்பு பிணி, சாக்காடு என்பவைகளையும் நீக்கி, நீடிய நல்வாழ்வையும் தரும். இதுபோன்றனவே சிவபுண்ணியங்கள். அதனால், இவை, தம்மைச் செய்தார்க்கு அதுபொழுது வேண்டுவனவற்றையும் தந்து, பின் அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டையும் தரும். அதனால் பதிபுண்ணியங்களாகிய சிவபுண்ணியங்களே செயற்பாலன, அவையே உண்மைத் தவங்களாம்.

பசு புண்ணியமும் பதி புண்ணியமும்

மாணுக்கன் : 'பதிபுண்ணியங்களே செயற்பாலன' எனில், மக்களும், பிற உயிர்களுமாகிய பசுக்களிடத்தில் அன்பும், அருளும் கொள்ளுதலும், கொண்டு அவற்றிற்கு நலம் செய்தலும், பிற தெய்வங்களை வழிபடுதலும் போல்வன கூடாவோ ?

ஆசிரியர் : அறியாது கூறினை! நீ கூறிய அச்செயல்கள், சிவபிரானை மறந்து, மக்களும், பிற உயிர்களும், பிற தெய்வங்களுமாகிய அவைகளையே நினைந்து செய்யும்பொழுதே பசுபுண்ணியங்களாம் அவ்வாறின்றி, 'அவையனைத்தும் சிவபிரானது திருவுளப்படியே உளவாகித் தம்வினைக்கேற்ப வாழ்ந்து வருகின்றன. அதனால் அவையாவும் சிவபிரானது குடிகளே. ஆதலின், அவற்றிற்குத் தீங்கு செய்ய நினைத்தல் சிவபிரானது திருவுளத்திற்கு மாறானது' எனவும், 'தீங்குசெய்யாதொழிதலும், வாய்ப்பு உண்டானபொழுது அவற்றிற்கு இயன்ற அளவில் நலம் செய்தலும் சிவபிரானது திருவுளத்திற்கு உவப்பான பணிகளாம்' எனவும் நினைந்து செய்யின், அவைகள் பதிபுண்ணியங்

களேயாகும். ஆகவே, நீ கூறிய செயல்களைச் சிவபிரானை மறந்து செய்யாமல், நாம் கூறியவாறு 'அவனை நினைந்தே செய்தல்வேண்டும்' என்றுதான் சைவசித்தாந்தம் கூறுகின்றது.

"இரப்பவர்க் கீய வைத்தார்; ஈபவர்க் கருளும் வைத்தார்;
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்"

என்று திருநாவுக்கரசர், 'புண்ணிய பாவங்கள் அனைத்தும் சிவபிரானது ஆணையே என உணர்தல் வேண்டும்' என்று அறிவுறுத்தருளுதல் காணலாம். அருணகிரிநாதர்,

"வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க் கென்று
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்"

என்றும்,

"கெடுவாய் மனனே; கதிகேள்; கரவாது
இடுவாய்; வடிவே லிறைதாள் நினைவாய்"

என்றும் கூறியது இக் கருத்துப் பற்றியே என்க. இவற்றை லெல்லாம், 'பதிபுண்ணியங்களே செயற்பாலன' என்பதன் கருத்தைத் தவறுபட உணராமல், நன்கு உணர்ந்துகொள்ள லாம்.

நீ மேற்கூறிய செயல்களைச் சிவபிரானை நினையாது செய்யின், அவை, 'வினை' எனப்பட்டு, பிறவிக்கு வித்தாகும். அவை களையே சிவபிரானை நினைந்து செய்யின், அவை, 'தவம்' எனப்பட்டு, முத்திக்கு வித்தாகும். அதுபற்றியே, 'பதி புண்ணி யங்களே செயற்பாலன' என்கின்றன சிவநெறிநூல்கள்.

சிவபுண்ணியத்தின் வகைகள்

மாணாக்கன்: அங்ஙனமாயின், இறப்பில் தவமாகிய, 'சிவ புண்ணியம்' எனப்படுவன யாவை?

ஆசிரியர்: மன மொழி மெய்களால் சிவபிரானை நோக்கிச் செய்யப்படுவன பலவும் சிவபுண்ணியங்களேயாதலின், அவை அளவில. ஆயினும், அவை அனைத்தும் மூன்றாக வகுக்கப்பட் டுள்ளன. அவை, 'சரியை; கிரியை, யோகம்' என்பனவாம்.

(தொடரும்)

புதுமைக்கு

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A.. Dip. Ling.

அன்புள்ள புதுமை,

உனக்குக் கடிதங்கள் எழுதி நீண்ட நாட்களாயின. 'ஓய்வு இல்லை' என்று எழுதி என்னையே நான் ஏமாற்றிட விரும்ப வில்லை. எழுதுவதற்கான சூழ்நிலை மனத்தில் எழாததே காரணமாகும். மனத்தில் அமைதியும் இன்பமும் இருந்தால் தானே வாழ்க்கையில் உற்சாகம் இருக்கும்'. மன அமைதி என்ன கடைச்சரக்கா? 'காசுகொடுத்தோம் வாங்கினோம்' என்று கூறுவதற்கு? எழுதும் சூழ்நிலையும் சுற்றுப்புறமும் அமைதி நிரம்பியதாக - மனத்துக்கு இயைந்ததாக இருத்தல் வேண்டுமல்லவா?

இன்று நாட்டின் நிலை என்ன? எண்ணிப்பார்க்கும் போது ஒருபால் துன்பமும் ஒருபால் மகிழ்வும் எழும்புகின்றன. புதிய வாழ்வின் படைப்புக்களை - அறிவுநுட்ப விளைவுகளை - அறிவியல் ஆக்கங்களை அறிந்திட மகிழ்வு தலையெடுக்கின்றது. வாழ்வின் அவலங்களைப் - பண்பாட்டுக் கீழ்மையினைக் - கயமைச் சேற்றினை - நடைச் சிறுமையினை உணர்ந்திட உள்ளம் துன்பம் அடைகின்றது. மன்பதை முழுவதும் திருந்திட வேண்டாவா? பலப்பல ஆயிரம் ஆண்டுகளாகத் தொன்றுதொட்டு அடிப்பட்ட சான்றோர் பலர் தோன்றாத நாடா இது? தனக்கென வாழாது உலகிற்கென வாழும் வாழ்வு ஒவ்வோர் உள்ளத்திலும் பூத்திருந்த தேயம் அல்லவா இது! தனியுடைமையை மன்பதையின் அங்கமாகவே மதித்து வாழும் பேராண்மை பெற்ற திருநாடல்லவா இது! தனியொருவனுக்கு வறுமையெனில் அதனைப் போக்கத் தன் வாழ்வையே இழக்கும் தன்னல மறுப்பாளர் வாழ்ந்த தமிழ்ச்சமுதாயம் அல்லவா இது! இந்நாட்டில் மீண்டும் அந்த நிலை வரவேண்டாவா? தம்பி! நீண்ட நாட்களாக உனக்கு நான் கடிதம் எழுதாமைக்குக் காரணம் இதுவே. சூழ்நிலை நாட்டில் நன்றாக இருந்தால் அடிக்கடி உனக்கு எழுதியிருப்பேன்.

சொல், செயல் இரண்டும் வாழ்வின் இன்றியமையா இரு நிலைகள். சொல்லின்றிச் செயல் இல்லை; செயல் இன்றிச் சொல் இல்லை. இவற்றுக்கிடையே ஆழ்ந்த பிணைப்பு இருத்தல் வேண்டும். பிளவுபடாத நிலை இவற்றுக்கிடையே என்றும் வேண்டும். இந்த உறவு, பழைய இலக்கண உரையாசிரியர்கள் நடையில் கூறவேண்டுமாயின் 'நீரும் நீரும் சேர்ந்தாற்போல' இருத்தல் வேண்டும். சொல்லுவோரெல்லாம் செயலில் ஈடுபாடு கொண்டிருத்தல் வேண்டும். செயல்வளம் உடையோரெல்லாம் சொல்லிடுதல் வேண்டும். அந்தச் சொல்லுக்கே வன்மை, நாட்டைக்காக்கும் நலம் இருக்கும். நாட்டைக் காவல் செய்வது 'வினையும் சொல்லும் ஒன்றுபட்டார்' பாங்கே ஒப்புடைக்கப்பட வேண்டும்.

சொல்லும் செயலும் வேறுபட்டவர்களை நினைக்கவே அஞ்சுகின்றார் திருவள்ளுவர். எப்போது? நனவின்கண் அன்று; கனவினுங் கூட. கனவினும் இத்தகையோரைக் காணும் நிலை வரலாகாது; அது துன்பமே தரும் என்று உறுதியாக உரைக்கின்றார் அப்பெரியார்:

'கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு'

எவ்வளவு எளிய, உறுதியான, சொல்லமைப்பு! இதனினும் மன்பதைக் கேட்டுக்குக் காரணமாம் இத்தகையோரைச் சாடுதலும் முடியுமோ? வள்ளுவர்க்கே அது வாய்க்கும். அவர் நாடு, மக்கள், இயல்புகளைக் கூரிதின் ஆராய்ந்து நோக்கி அரும்பனுவல் யாத்த அருளாளர். யார்க்கும் அஞ்சிக் கூற வந்ததைக் குரல்வளைக்குள்ளேயே அடக்க வேண்டிய இடர்ப்பாடு இருந்திருக்காது. இருப்பினும் உண்மையை உரைக்கத் தயங்காத உள்ளம் வள்ளுவரது.

கூறும் சொல் நிலைத்ததாக இருத்தலும், அதுபற்றி நிகழும் செயல் எல்லாம் காலம் செல்லச் செல்ல இனிமை பயப்பதாக இருத்தலும் வேண்டும் என்பது சங்கச் சான்றோர் கருத்து. 'நின்ற சொல்லர் நீடுதோன்றினியர்' என்ற கபிலர் வாக்கைக் கருதும்போதெல்லாம் எனக்கு நெஞ்சில்தோன்றும் நினைவு இது. சொல்வேறு செயல்வேறு படாத அறிவுடையுலகு உலகிற்பூத்தல் வேண்டும். நால்வர், ஆழ்வார்கள், தாயுமானவர், இராமலிங்கர், வரை உணர்த்தப்பட்டுவரும் செய்தியே இது; விளைவு என்ன? இன்றும் இந்நிலை நீடிக்கலாமா? இதை 'இறைவன் திருவருட்

பாங்கு; நாம் என்ன செய்யக்கூடும்'. என்றவகையில் புறக் கணித்திடவும் இயலவில்லை என்னுல். இறைவன் திருவருட் பாங்கே எல்லாம்; ஆயினும் நம் சிறு கரங்களிலும் இறைவன் கடன்கள் பலவற்றை ஒப்படைத்திருக்கின்ருன் என்பதை மறுப்பார் யார்? ஆதலின் 'அவன்விட்ட வழியாகட்டும்' என்ருே, 'ஊழின் வலி அது' என்ருே கூறி ஒதுங்குவதை நான் அறவே வெறுக்கின்றேன்.

படித்த படிப்பும் வாழ்வும் ஒன்றுபட வேண்டும் என்பதில் விழிப்பாக அறிவுடையுலகு இருக்கத் தொடங்கின் இந்நிலை வாராமல் — வளராமல் தடுக்கலாம். 'அரம் போலும் கூரிய அறிவுடையாரேனும் மக்கட் பண்பில்லாதவராயின் அவர் மரம் போல்வர்' என்றெழுதிய திருவள்ளுவரின் திருக்கை இத்தகைய இதயத்தின் வழியே ஓடியதன்ருே ?

அண்மையில் ஒரு நீண்ட சொற்பொழிவு கேட்டேன். நால்வர் ஆழ்வார் முதலியவர்களின் அருள் அனுபவங்களைப் பற்றியது அது. பேச வந்தவரோ மிக்க அழகுடன் அந்த அருட் பனுவல்களை விளக்கினர். நல்ல பண்கலந்து அப்பாடல் களைப் பாடினர். இடையிடையே தாயுமானவரும் வடலூராரும் வந்தார்கள். திருக்குறள் முதலிய சங்கச் சான்ருேர்களும் எடுத் துக்காட்டுக்காக வந்து தோன்றினர்கள். ஆங்கில மேற்கோள் கள் ஓடிவந்து இளைஞர் உலகை மருட்டப் பயன்பட்டன. (மொழிச் செல்வாக்கு எங்கெல்லாம் எவ்வாறெல்லாம் பயன் பட்டுப் பாழாகிறது !) கேட்டோர் மதிமயங்கினர்; தலை அசைத் தனர்; பண்கேட்டபோதெல்லாம் உள்ளம் உருகினர். சொற் பொழிவாளரது நாவன்மை இப்படியெல்லாம் அனைவரையும் ஆட்கொண்டது. பேச்சு முடிந்தபிறகு அதை ஏற்பாடுசெய்த அன்பரைக் கண்டு அளவளாவினேன். 'இத்தகு விரிவுரைகள் இந்தநாட்டின் சிற்றூர்களில் எல்லாம் நடத்தல் வேண்டும். வெறும் அரசியற் கூட்டங்களே கேட்டுக் கேட்டு வசவு மொழி களுக்கு — ஏச்சுக்கும் பேச்சுக்குமே பயன் படுத்தப்பட்டு வரும் எளிய மக்கள் செவிகளிலே இந்த அமுதமழை பொழியவேண் டும் ஆதலின் இந்நகரஞ்சார்ந்த சிற்றூர்களிலேனும் இவ், விரிவுரைகள் நீடிக்கத் தாங்கள் துணைபுரிந்திடவேண்டும்' என்று கேட்டுக்கொண்டேன் அவர் அதனைப் பொதுவாக ஏற்றுக்கொண்டு பின் கூறிய சிலசெய்திகள் என் செவிகளின் வழியே புகுந்து சிந்தையை மயக்கின. 'சிற்றூர்களிலே நடத்து வதென்னவோ நல்லதுதான். ஆனல் இப்பேச்சாளர்க்குரிய பெருந்தொகையை அங்குத் திரட்டுவது அரிதாகுமே. நகரத்

திலாயின் பல்வேறு அரசியற்கட்சி சார்ந்தோரின் செல்வாக்கைப் பயன்படுத்திப் பலரையும் மருட்டியும் அச்சுறுத்தியும், நயங் காட்டியும் பயங்காட்டியும் பணம் தொகுக்கலாம். அன்றியும் மிக உயர்ந்த வசதிகள், தட்ப வெப்ப சமநிலை அறைகள் முதலிய வற்றோடு கூடிய தங்குமிடம் (Lodge) இல்லையேல் இவர் பெரிதும் சினம் அடைவார். மிகவுயர்ந்த வகையிலமைந்த இறைச்சி உணவுகள் ஆக்கப்பெறும் சிற்றுண்டிச் சாலைகள் சிற்றூர்களில் கிடைக்கப்பெறமாட்டா. ஒருவேளையேனும் அத் தகு உணவு இவர் உட்கொள்ளாராயின் அன்றைய பேச்சு வளமாக அமையாது. இவ்வளவு இடர்ப்பாடுகள் உள்ளனவே'' என்பனவே அந்த அன்பர் கூறிய வார்த்தைகள். என் கண்கள் ஏன் இருண்டன, என் சிந்தை ஏன் அதிர்ந்தது என்பதற்கு இதற்கு மேலும் விளக்கம் வேண்டுமா ?

புதுமை! நான் உன் புறவழகில் மயங்கிச் சீரழிவோரைப் பற்றியே மனத்துயர் கொள்கின்றேன். 'சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை' என்ற அழகிய திருவாசகப் பகுதி என் நினைவில் இப்போது எழுகின்றது. 'சித்தம் அழகு' என்ற இரு சொற்கள் என் உள்ளத்தில் தேனாய் - அமுதமாய்த் தித்திக் கின்றன. மன அழகு வாராதா ? நெஞ்சிலே கறுப்பும் வாய் மொழியிலே வெளுப்புமா ? இந்நிலை நாட்டிற்கும், நாட்டுப் பண்பிற்கும நன்றா ? எனவே 'ஒருவர் பேசும் மேடைப் பேச்சும், அவரது தனிவாழ்வும் ஒன்றாக அமைகின்றதா ?, என்று உலகம் நோக்குகின்றது. அந்த நோக்கத்தில் பெரும் பாலோர் தோற்றுவிடக் காண்கின்றேன். அத்தோல்வி பண் பாட்டு வாழ்விற்கே ஒரு சவாலாக இருக்கக் காண்கின்றேன். இதனால் சொல்லையும் செயலையும் ஒன்றாக்கி, தொண்டுசெய்யும் தூயோர் சிலர்மீதும் உலகு ஐயுறக் கூடும் அன்றோ ? அதற் காகவே பெரிதும் அஞ்சுகின்றேன். இத்தகு தூயோர் சிலர் வாழ்வதாலேயே உலகு நிலைபெற்று நிற்கின்றது.

புதுமை ! என் எண்ண அலைகளுக்கு முறையான வடிவம் கூட என்னால் கொடுக்க வியலாதெனக் கருதுகின்றேன். குழம்பிப்போயிருக்கும் என் நெஞ்சில் தெளிவு காணும் போதெல் லாம் உனக்கு எழுதுவேன். உன் ஐயங்களை அடுத்துத் தெரி வித்தால் தெளிவுறுத்தலும் செய்வேன். 'கற்றல் கேட்டலுடை யார் பெரியார்' என்ற சான்றோர் வாக்கில் நம்பிக்கை வைத்து இவ்வளவில் நிறுத்துகின்றேன்.

அன்பு.

பழமை.

"கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 27, இதழ் 11, பக்கம் 529 இன் தொடர்ச்சி)

(6) வெள்ளியம்பலத்தில் திருக்கூத்தாடியது

உலகியலை நிலை நிறுத்த வந்த ஒரு பரஞ்சுடர் வான்திங்கள் குலமணி விளக்கென்ற தடாதகைப் பிராட்டியாரை மணங் கொண்ட பின்பு அங்கு வந்திருந்த மண்ணுள் வேந்தர்-வானோர்-மாதவர் யாவரும் உண்ண வரலாம் என்று உத்திரவிட்டபோது அனைவரும் பொன்னவிர் கமலம் பூத்த புனிதநீராடி-நியமங்களை முடித்த பின்னர் உணவுகொள்ள எழுந்தனர்.

புலிக்கால் முனிவரும் (வியாக்ரபாதர்) பன்னக முனிவரும் (பதஞ்சலி) இறைவனின் திருவடிச் செம்மலர்களைப் பணிந்து அடியேம் இருவரும் பொன்னம்பலத்தில் நினது நட்டம் (நடனம்) கண்டபின்பே உணவில் நாட்டம் கொள்வோம் - எங்களின் நியமமிது என்று பணிவுடன் விண்ணப்பித்துச் கொண்டனர். வேண்மூடித்த வள்ளல் அப்படியானல் அக் கூத்தை இம்மதுரையிலேயே உம்பொருட்டாக நாம் ஆடுவோம்-கவலற்க-என்று அபயமளித்து உலகமென்ற விராட் புருடனுக்குத் தில்லையம்பதி இதயமாகும்-இம்மதுரை துவாத சாந்தத் தலமென்று அருளிச்செய்தார். முனிவர்கள் வெகு ஆவலுடன் பெரியீர்! மற்றைய தலங்களையும் உணர்த்தியருள வேண்டும் என்று பணிய பெருமான் அறிவித்தார்.

திருவாரூர் - மூலாதாரம். திருவானைக்கா - சுவாதிட்டானம். திருவண்ணாமலை - மணிபூரகம். தில்லை - அநாகதத் தானம். திருக்காளத்தி - விசுத்தி. காசி - ஆக்ஞை. திருக் கயிலாயம் - பிரமரந்திரம். மதுரை - துவாத சாந்தம். இம் மதுரை முன்னர் தோன்றியமுறைமையால் எத்தலத்தையும்விட

அதிகச் சிறப்புப் பெற்றது என்று கூறி திருக்கோயிலினுட் புகுந்தான்.

நாயகன் ஆடிய நடனம் :

பொன்னவிர் விமானத்தின் கீழ்ப் பக்கத்தில் தன்னைவிட்டுப் பிரிந்து வந்த பரம்பொருளைப் பிரிய மனமில்லாமல் பின் தொடர்ந்து வந்த கயிலாய மலையே இம்மன்றமாகி நின்றதோ - என்று வியக்கும் வண்ணம் ஓர் வெள்ளி மன்றம் எழுந்து நின்றது. பாற்கடலில் பகலவன் உதித்ததுபோல அதன் நடுவில் மாணிக்கப் பீடம் தோன்ற அது அடியவர்களின் உளத் தாமரையோ - வேதச்சென்னி தன் பொலிவோ என்று எண்ணும்படி விளங்கியது.

அதன்மேல் கோடி கதிரவனின் ஒளியோடு பெருமான் வாத்தியங்கள் பலவும் ஒன்றுகி ஒலிப்ப, நந்தி மத்தளங்கொட்ட நாரதர் இசைபாட, நான்முகன் வீணைதடவ, நாமகள் சுருதி கூட்ட முயலகன்மேல் வலக்காலை மிதித்து நடனம் ஆடினுர்.

“ செக்கரஞ் சடையும் தேசார் வெண்டிரு நீறுந் தெய்வ
முக்கணு முரகக் கச்சு முள்ளெயி றிமைக்கு மார்பும்
மைக்கருங் கயற்க ணங்கை வல்லியி னெதுங்கி நிற்கும்
பக்கமு மவண்மேல் வைத்த பார்வையு நகையுந் தோன்ற ”

ஆடல்வல்லான் ஆடிய திருநடனத்தைக் கண்டு பதஞ்சலி வியாக்ர பாதர்கள் உள்ளமும் உணர்வும் விம்ம விள்ளரிய வியப்பினுல் உரைதடுமாற களிகூர்ந்தனர். அஞ்சலி முகிழ்த்த கையினைச் சென்னியில் சூடினர் - ஆடினர் அடியில் விழுந்தனர், வேதம் ஆயிரம் நாவாரப் பாடினர், பணிந்தனர் மாதவர் களாகிய இவர்கள் பொருட்டால் ஆடிய தெய்வத் திருக்கூத்தை மற்றைய முனிவர்கள், கந்தருவர் வானோர். தானவர், மோன யோகா ஆகியவர்கள் கண்டது வியப்புக்குரியதன்று; திருமணங் காணவந்த மனிதர்களுமல்லவோ அதனைக் கண்டு ஆனந்தித் தனர் என்று பரஞ்சோதியார் மூக்கின் உச்சியில் சுட்டுவிரல் சேர்த்து வியக்கின்ருர்.

வேண்டியது தருவான் விமலன் :

" அடியேரேம் பொருட்டு வெள்ளி யம்பலத் தாடல் போற்றி
பொடியணி தடந்தோள் போற்றி புரிசடை மகுடம் போற்றி
கடியவிழ் மலர்மென் கூந்தற் கயல்விழி பாகம் போற்றி
நெடியதற் பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி "

என்று இருமுனிவரும் பரவிப் பணிந்த பின்பு இக்கூத்துக் கோலத்துடன் என்றும் இங்கே இருந்து அருள்பாலிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். செந்தமிழ்க் கன்னிநாடு செய்த மாதவப்பேறு காரணமாக அதனை ஏற்றுக்கொண்டான் வேதந் தலைதடுமாற நின்ற வித்தகன்.

பதஞ்சலி முனிவர் மீண்டும் ' இந்நடனத்தை நேரே தரிசித்தவர் மண்ணதனிடைப் பின்னும் பிறவாவரம் அருளவேண்டும் என்று பணிய அதற்கும் இசைவுதந்தான் இறைவன். மார்கழித் திருவாதிரை தொடங்கி ஓராண்டெல்லையும் பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி - பொதுநடம் தரிசித்து - அங்கினிதாக அமர்ந்து திருவைந்தெழுத்தை நூற்றெட்டு முறை செபிப்பார்களானல் கருதியதெல்லாம் கைகூடும் என்பது பரஞ்சோதியாரின் உண்மை வாக்காகும்.

(வளரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswaraswami Devasthanam, Tirucadaiyur.

I have visited the temple many a time. I cannot resist its call. This time it so happens that my wife's Sashti abtha boorthi was celeberated this morning. Needless to say that I enjoy my visit to this temple immensely. It is kept neat and the authorities incharge of it are courteous and kind. I wish them all well while conveying my gratitude to the Thambiran swamigal and his assistants.

(Sd.) P. T. Rajan,
25—10—68.

செவ்வாய்

வேதாந்த சிரோமணி,
பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

வானவெளியில் கண்கூடாகக் காணக்கூடிய சந்திர சூரியர்களைப்போலவே செவ்வாய் கிரகமும் எளிதில் அறியக்கூடியதே. அதனுடைய தணல்போன்ற செந்நிறத்தோற்றமே நன்ருகச் செவ்வாயை உணர்த்தும்.

மத்ஸ்ய புராணத்தில் :

ரக்தமால்யாம்பரதர: சக்தி சூல கதாதர: l சதுர்புஜ: ச்வேத ரோமா வரதஸ் ஸ்யாத் தராஸுத ll என்று நான்கு கைகளும், சக்தி, சூலம் கதை வரதம் இவைகளைக் கையில் உடையவராகவும் கூறப்படுகிறது. மேஷ (ஆடு) வாகனத்தில் இருப்பவன் சிம்மாசனத்தில் இருப்பவன், எட்டுக் குதிரை பூட்டிய தேரில் இருப்பவன் என்று மூன்று வகையான இருப்புகள் கூறப்படுகின்றன. வலதுகையில் வரதத்திற்குப் பதிலாக அபய ஹஸ்தம் உண்டு என்றும் சிலர் கூறுகின்றனர். வேளூரில உத்ஸவ மூர்த்தியையும், மூலஸ்தானத்தையும் பார்ப்பவர்களுக்கு இது புலப்படும். இடது கைகளில் கதையும் சூலமும் உள்ளன. அங்காரக மந்திரத்திற்குரிய தியானத்தில் ''சக்திசூல கதா பத்மான் தரன்தம் ஸ்கராம்புஜை;'' சக்தி, சூலம், கதை, பத்மம் இவற்றை தரித்தவராகக் கூறப்படுகிறது. சூரியனுக்கு நாலாவது வட்டத்தில் செவ்வாய் இருக்கிருன். சுக்கிரனுக்கு சமீபமாக உள்ளது. இதுசுமார் 688 நாட்களில் சூரியனை ஒருமுறை சுற்றும். இதற்கு இரண்டு உபகிரகங்கள் உண்டு என்று கணித சாஸ்திரம் கூறும்.

நவக்கிரகங்களில் மிகச் சிறியது புதன். அதற்கு அடுத்தபடியாகச் சொல்லக்கூடியது செவ்வாய்தான். செந்நிற ஒளி வீசுவதால் செவ்வாய், லோஹிதாங்கன், அங்காரகன் என்று கூறப்படுகிருன். இந்தக்கிரஹத்தில் கருநிறக் கோடுகள் தெரிவதாக இத்தாலிய வானவியல் அறிஞர் ஸ்க்கியாப்பாரெல்லி Schiaparelli என்பவர் 1877ல் கண்டுபிடித்தார். அவருடைய பெயராலேயே அக்கருநிறக்கோடுகள் ஸ்க்கியாப்பாரெல்லிகால்வாய்கள் என்று விஞ்ஞானிகளால் சொல்லப்படுகின்றன. அக்கோடுகள் ஒரே

நேராக இருப்பதால் அவை இயற்கையாக உண்டானவை இல்லை. மனிதர் போன்ற அறிவுள்ளவர்களால் செவ்வாயின் துருவங்களில் உள்ள பனிக்கட்டிகள் உருகிப் பெருகும் நீரைப் பயன்படுத்த உண்டாக்கப்பட்ட கால்வாய்கள் என்று பெர்சிவல் லோவல் Percival Lowell என்ற அறிஞர் எண்ணினர். செவ்வாயில் அந்தக் கால்வாய்களின் ஓரமாக உள்ளவை பயிர் செய்யப்படும் நிலங்கள் என்றும் அவர் எண்ணினர். அங்கு ஆரஞ்சு நிறமாகத் தோன்றுமிடங்கள் பாலைவனம் என்றும் அறிவுள்ள மக்கள் அங்கு வாழ்வதாகவும், அங்கு மழையில்லாமையால் பனியுருகிப்பெருகும் நீரையே கால்வாய் வழியாகப் பாசனத்திற்குப் பயன் படுத்துவதாகவும் அவர் கருதுகிருர் இதற்கும் வாயுமண்டலம் உண்டு. ஆனல் நம் வாயுமண்டலம் போல அடர்த்தியானது இல்லை. இலேசானது அக்காற்றிலுள்ள நீராவி பாலைவனங்களில் உள்ள இரும்புகளில் மிகுதியாகக் கலந்து துருவாகி செந்நிறம் அடைந்துள்ளது என்றும் விஞ்ஞானிகள் கருதுகிருர்கள்.

செவ்வாயின் உற்பத்தியைப்பற்றி புராணங்கள் பலவாறு கூறும். அவையாவும் கல்ப பேதத்தால் ஏற்கத்தக்கனவே.

பத்ம புராணத்தில் :

சிருஷ்டிகண்டம் 83 அத்தியாயத்தில் ஹிரண்யாக்ஷன் குலத்தில் பிறந்த அந்தகன் என்ற அசுரன் காம மோஹிதனய் பார்வதி தேவியைக் கவர முயற்சித்தான். அதன் காரணமாக பயங்கரமான தேவாசுர யுத்தம் நடந்தது. அப்போரில் தேவர்களால் கொல்லப்பட்ட எல்லா அசுரர்களையும் அசுரகுருவான சுக்ராசாரியார் பிழைக்கச் செய்தார். அதனுல் போர் ஓய்வு இன்றி நடந்துகொண்டே இருந்தது. இதை அறிந்த சிவபெருமான் சுக்ராசாரியாரை அடித்துக்கொல்ல முயன்றபோது ''நான் பிராமணன் என்னைக் கொன்ருல் பிர்மஹத்தி தோஷம் உண்டாகும் ஈசா என்னைக் கொல்லாதே'' என்று சுக்ராசாரியார் வேண்டிக்கொண்டார் அவருடைய வேண்டுகோளுக்கு இரங்கிய பரமகருணநிதியான சிவபெருமான் பயங்கர ரூபம் எடுத்து அவரை விழுங்கி விட்டார். பிறகு அசுரர் யாவரும் அழிந்தபோதிலும், மரிக்காத அந்தகாசுரனை, சூலத்தால் குத்தியும் இறக்காததால், அவனை தன் கணங்களுள் ஒன்ருகிய பிருங்கிரிடியாக ஆக்கிக்கொண்டார். பிறகு விழுங்கிய சுக்கிரனை வெளியிட்டார் சுக்கிரனை வெளியிடும்பொழுது பூமியில் விழுந்த சிவ அம்சமானது லோஹிதாங்கனுக (சிவந்த அவயவங்களை

யுடைய) செவ்வாயாக ஆனார். அந்த செவ்வாயைக் குறித்து சதுர்த்தியும் செவ்வாய்க்கிழமையும் கூடிய நாளில் முக்கோண மண்டலத்தில் சிவந்த மலர், சந்தனம் முதலியவற்ருல் பூசிப்பவர்களுக்குச் செவ்வாய் கிரஹத்தினல் உண்டாகும் பீடைகள் உண்டாகாது என்று சிவாம்சமாக செவ்வாயின் உற்பத்தி கூறப்படுகிறது.

மத்ஸ்ய புராணத்தில் :

தாக்ஷாயணி தன்னுடைய தந்தை தக்ஷன்செய்கிற வேள்விக்கு கணவனுடைய சொல்லை மீறிச் சென்ருள். யாகசாலையில் தக்ஷனல் நன்கு வரவேற்கப்படாமையால் கோபம் கொண்டு தக்ஷனுடைய சம்பந்தமுள்ள உடலை நீத்தாள். இதைக் கேள்வியுற்ற சிவபெருமான் கோபம்கொண்டார். அப்பொழுது நெற்றியில் உண்டான வியர்வைத்துளி பூமியில் விழுந்து பல முகம், கண், கால், கைகளுடன், வீரபத்ரன் தோன்றி தக்ஷயாகத்தை அழித்தான். மேலும் மூவுலகையும் அழிக்கத் தொடங்கிய வீரபத்ரனை,

க்ருதம் த்வயா வீரபத்ர தக்ஷயாக விநாசனம் I
இதானீ மலமேதேன லோகதாஹேந கர்மணா I
சாந்தி ப்ரதாதா சர்வேஷாம் க்ரஹாணாம் ப்ரதமோ பவ I
அங்காரக இதி க்யாதிம் கமிஷ்யஸி தராத்மஜ II

என்று கூறி, பூமியில் வியர்வைத்துளி விழுந்து உண்டான வீரபத்ரனை உலகங்களுக்கு சாந்தியை கொடுக்கும் கிரகங்களுள் ஒருவனுகவும் தணலைப்போல சிவந்த மேனியுடையவனுக இருத்தலின் அங்காரகன் எனப்புகழுடையவனுகவும் செய்தார். செவ்வாய்க்கிழமை சதுர்த்தி வரும் நாளில் அங்காரக சதுர்த்தி விரதம் செய்பவர்கள், அழகு ஆரோக்யம், ஐச்வர்யம் இவற்றை அடைவர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விரதத்தின் முடிவில் அர்க்கியம் கொடுக்கச் சொல்லப்படும்.

"பூமிபுத்ர மஹாபாக ஸ்வேதோத்பவ பிநாகிந : I
ருபார்த்தீ த்வாம் ப்ரபன்னேஸ்மி க்ருஹாணார்க்யம்
நமோஸ்து தே II"

என்ற மந்திரம் மேற்கூறிய வரலாற்றைக் குறிப்பதாகவும் அமைந்துள்ளது.

விநாயக புராணத்தில்:

பரத்வாஜர் என்ற முனிவர் நர்மதையில் ஸ்நானம் செய்யச் சென்றபொழுது அப்ஸரஸ் ஸ்திரீயின் அழகினால் மயங்கினர். வீர்யம் நழுவி பூமியில் விழுந்தபடியால் பூமிபுத்ரனை செவ்வாய் தோன்றி தபோபலத்தினால் கிரகங்களுள் ஒருவனாக ஆனான் என்று கூறப்படும். நவக்கிரஹபூசையில் - செவ்வாயை சிவப்புச் சந்தனத்தால் செய்தல் வேண்டும் என்று அக்னிபுராணம் கூறும். பத்ம புராணமோ சுவர்ணத்தால் செய்து தாம்ரபாத்திரத்தில் வைத்துப் பூசித்தல் வேண்டும் என்று கூறும்.

செவ்வாய்க்கு சிவந்த புஷ்பம், சந்தனம், மாலை, ஆடை, குடை, கொடி முதலியன பிரீதிகரமாவன. சூரியனுக்குத் தெற்கு திக்கில் தெற்குமுகமாக கிரஹமண்டலத்தில் இருப்பவன். இது வைதிக முறை. ஆகம ரீதியாக ஆக்னேய திக்கில் செவ்வாய் பூசிக்கப்படுகிறான். முக்கோண வடிவமான மண்டலத்தில் இருப்பவன். அவந்தி தேசத்திற்கு அதிபதி செவ்வாய். க்ஷய வருஷம் புரட்டாசிமாதம் சுக்லபக்ஷ த்விதீயையில் பூர நக்ஷத்திரத்தில் பிறந்தவன். பாரத்வாஜ கோத்திரம். மேஷ விருச்சிக இராசிகளுக்கு அதிபதி. இவனுக்குரிய தான்யம் துவரை. கருங்காலி சமித்தில் பிரியமுள்ளவன். குரு, சூரியன், சந்திரன் இம் மூவரும் செவ்வாய்க்கு மித்திரர்கள். புதன் சத்ரு. இவனுடைய அதிதேவதை பிருதிவீ (பூமி) பிரத்யதி தேவதை க்ஷேத்ரபாலன்.

விரதசூடாமணியில்:

அச்வினி நக்ஷத்திரம், செவ்வாய்க்கிழமை, சதுர்தசி திதி இவை கூடிய நாளில் சிவபெருமானை மிகுந்த பக்தியோடு பஞ்சோபசாரத்துடன் பூசித்து ரக்தோத்பல புஷ்பத்தை உண்டு விரதமிருப்பவன் ஸாம்ராஜ்யத்தை அடைவான் என்று பௌம விரதம் சொல்லப்பட்டிருக்கிறது.

ரோஹிணி நக்ஷத்திரம், அஷ்டமீ திதி செவ்வாய்க்கிழமை கூடின நாளில் பௌம விரதம் செய்யவேண்டும் என்றும் ஒருவிதி கூறுகிறது. பத்ம மாத்ஸ்ய புராணங்களில் செவ்வாய்க்கிழமை சதுர்த்தீ திதியுடன் கூடிய நாளில் அங்காரக விரதம் செய்யவேண்டும் "பூமிபுத்ரபுகாபாக ஸ்வேதோத்பவ பினாகின:" என்ற மந்திரத்தால் அர்க்கியம் கொடுக்கவேண்டும். அழகிய உருவத்தைப் பெறுவான் என்று அங்காரக சதுர்த்தீ விரதம் கூறப்படுகிறது. கிருஷ்ணபக்ஷம் சதுர்தசி செவ்வாய்க்கிழமை

வந்தால் அதற்கு கிருஷ்ணாங்காரக சதுர்தசி என்று பெயர்: அன்று யமதர்மராஜனுக்கு விசேஷ அபிஷேக பூசைகள் செய்வது மிகுந்த பலனளிக்கும் என்று விரதகல்பம் கூறும். ரிணமோசக அங்காரக விரதம் என்று ஒன்று உள்ளது. அதில் "மங்கள. பூமிபுத்ர:, ரிணஹர்த்தா, தனப்ரத:, ஸ்திராஸன:, மஹாகாய:, ஸர்வகர்மாவரோதக:, லோஹித:, லோஹிதாக்ஷ:, ஸாமகானும் க்ருபாகர:, தர்மராஜ:, குஜ:, பௌம:, பூதித:, பூமிநந்தன:, அங்காரக:, யம:, ஸர்வரோகாபஹாரக:, விருஷ்டிகர்த்தா, அபஹர்த்தா, ஸர்வகாம பலப்ரத:" இந்த இருபத்தொரு நாமங்களையும் தினம் படிப்பவர் ரூபம், தனம் ஸந்தானம் இவற்றைப் பெறுவர் என்று கூறப்படுகிறது.

புள்ளிருக்கு வேளூர் தலபுராணம் அங்காரகன் அருச்சனை செய் சருக்கம் "மங்கள உருவமான வயித்திய நாதஞ் சேர்ந்து பங்குனிச் செவ்வாய் தன்னில் பரந்திடும் அமுதம் என்னும் பொங்கு பூம்புனலில் மூழ்கிப் புராதன வயித்திய நாதன் பங்கய சரணம் கண்டு பணிந்து, எண்ணருந் துயரங் கூர விருந்த செங்குட்டம் நீங்கி செவ்வாய் இன்புற்றிருந்தான்" என்று கூறுமுகத்தால் புள்ளிருக்கு வேளூரின் பெருமையையும், அங்காரகனைப் பற்றிய வரலாற்றையும் உணர்த்துகிறது

செவ்வாய்க்கு அஷ்டோத்திர சதநாம ஸ்தோத்திரம் ஒன்று நவக்கிரஹ ஆராதனக்கிரமம் என்ற நூலில் ஸ்காந்தத்திலுள்ளதாக உள்ளது. அதனினும் வேறுபட்டதாக மற்றொரு அஷ்டோத்திர சதநாமம் நாமாவளிமட்டும் சென்னை அர்ச்சகர் சங்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அஷ்டோத்திர சதநாமாவினால், செவ்வாய் சக்திஉபாஸகன் என்பதும் சஸ்திர வித்தையில் நிபுணன் என்பதும் தெரிகிறது. விரூபாக்ஷரை ரிஷியாகக் கொண்ட அங்காரக கவச ஸ்தோத்திரம் ஒன்று உள்ளது. அதனால் வயிற்றிலுள்ள ரோகங்களை நீக்குபவன் என்பது தெரிகிறது. ரிணவிமோசக அங்காரக ஸ்தோத்திரத்தினால் கடன் தொல்லை தீரும் எனவும் செல்வச் செழிப்பு முதலியன உண்டாகும் எனவும் தெரிகிறது. விரதசூடாமணியில்

அங்காரகாய வித்மஹே சக்தி ஹஸ்தாய தீமஹி
தின்னோ பௌம: ப்ரசோதயாத்

என்று காயத்ரீ காணப்படுகிறது.

லோஹிதாக்ஷாய வித்மஹே பூ(மி)லாபாய தீமஹி
தன்னோ அங்காரக: ப்ரசோதயாத்"

என்ற ஒரு காயத்ரீ மந்திரமும் ஆகமானுசாரிய இருப்பதாகத் தெரிகிறது.

ஸாமவேதிகளுக்கு சாகாதீசன் செவ்வாய் ஆதலின் செவ்வாயின் மௌட்டியம், நீசம், அஸ்தமன காலங்களில் ஸாம வேதிகள் உபநயனம் செய்யலாகாது.

தந்தை பரத்வாஜ முனிவரின் உபதேசத்தால் செவ்வாய் விநாயகரை வழிபட்டான் மாகசதுர்த்தி செவ்வாய்க்கிழமையுடன் கூடிய நாளில் விநாயகர் பிரசன்னமாக செவ்வாய்க்கு வரமளித்தார். "ஸர்வமங்கள ரூபியாக நான் உனக்குக் காட்சி கொடுத்தமையால் நீ மங்களன் எனப் பெயர் பெறுவாய், இந்த நாளில் உன்னைப் பூசிப்போர் ஸகல மங்களங்களையும் மடைவர்" என விநாயகர் அருள் செய்தபடியால் நாமும் மங்களனைப் பூசித்து மங்களங்களைப் பெறுவோமாக

வேல்கொண்ட வேலா

பேரிறைவன் - பழநி

எடுப்பு

வேல்கொண்டு காத்தருளும் வேலா — என்
வேதனை தீர்த்திடும் பாலா (வேல்)

தொடுப்பு

கோல்கொண்ட ஆண்டியாகக் குன்றிலுறைவோனே
குமரப் பெயர்கொண்ட பழநி மலையோனே (வேல்)

முடிப்பு

ஆயிரம் உள்ளங்கள் உனக்கென உண்டு
ஆறுபடைக் களங்கள் உறைவதற்கும் உண்டு
பாயிரம் பாடுதற்கோ பாவலர் தானுமுண்டு
பரிந்து அருள்புரிய பன்னிரு கரமுண்டு (வேல்)

சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 27, இதழ் 11, பக்கம் 525 இன் தொடர்ச்சி)

சூக்ஷ்மை என்ற சப்த்த விருத்தியானது நாதமாத்திரையாய் விளங்குவதாய் மூவகை ஆன்மாக்களுக்கும் ஞானப்பிரகாசத்திற்கு ஏதுவாய் சூக்ஷ்மை என்னும் பேர்பெற்றிருக்கும் அந்த சூக்ஷ்மையானது தானே விருத்தியாய் பஞ்சவர்ணங்களையும் சூக்ஷ்ம ரூபமாய் ஒலிக்கின்ற மயில் முட்டைக்குள் இருக்கிற நீர்போல் பிரிக்கப்படாத வர்ணங்களையுடையதாய் உன்முகமாய் அர்த்த விசேஷத்தை போதிக்கப்படாமல் சிந்தையில் இருக்கிற சத்தம் பைசந்தீ எனப்படும். அது தானே விருத்தியாய் செவிக்குக் கேழ்க்கப்படாததாய் உள்ளே உணர்த்தப்படுவதாய் உதான வாயுவின் தொழிற்பாடு பற்றியிருப்பதாய் கண்டத்தில் அடங்கியிருக்கும் சத்தம் மத்தியமை. பிராணவாயு வியாபரமாய் மேலே எழுந்து தன்செவிக்கும் பிறர்செவிக்கும் கேட்கயோக்கியமாய் அர்த்தத்தைச் சொல்லுவதாய் இருக்கிற சப்த்தம் வைகரி.

இந்த நான்கு வாக்குகளும் நிவிருத்தி முதலிய பஞ்ச கலைகளைப் பற்றுக்கோடாகச் சார்ந்து, ஐவகைப்பட்டு சிவதத்துவம் முதலிய பஞ்ச தத்துவங்களிலும் இருக்கும் மூவகை ஆன்மாக்களிடத்திலும் பந்தித்திருக்கும்; இந்த வாக்குகள், தனக்கு அந்நியமாக ஒருவன் சிவஞானத்தால் கண்டால் கண்ட காலத்திலே ஆணவ மலத்துடனே நீங்கும் அல்லது ஒருவருக்கும் நீங்காது.

இந்த வாக்குகளைஞானவான் யாவன்அன்னியமாகக் காண்கிருனே அவன் நித்தியனுகி நினைப்பும் மறப்பும்அற்றவனுகி விகாரமில்லாதவனுய் சுவதந்திரனுகி ஞானனந்த ஸ்வரூபி ஆவன். எவ்வாறு எனில் சூரிய உதயத்திலே நக்ஷத்திரப் பிரகாசமும் அந்தகாரமும் போலச் சிவஞானப் பிரகாசத்திலே அஞ்ஞானமாகிய ஆணவ மலத்துடனே இந்த வாக்கு ரூபமாகிய விக்ஞானம் போம்

சூக்ஷமை வாக்குக்கு இடம் மூலாதாரம். இவ்வாக்கு மூலா தாரத்திலிருந்து எழும்பி நாபியை அடையும். நாபியை அடைந்து அங்கே எழுத்துக்களை வேறு வேறாகப் பிரியவிடாமல் அடக்கிக்கொண்டு மிகவுஞ் சூட்சும ரூபமாய் நிருவிகற்ப உணர் விற்கு ஏதுவாயிருக்கும். இந்நிலையில்அது பைசந்தி எனப் படும். பின்பு அங்கிருந்து அவ்வாக்கு உதானவாயுவினாலே உந்தப்பட்டு இருதய ஸ்தானத்தை அடையும். அங்கே உதான வாயுவின் தொழிலால் எழுத்துக்கள் வேறு வேறாகப் பிரிவு பட்டுச் சூக்ஷம ரூபமாய் விளங்கி மெல்லோசையாய்ச் சொல்லு வோன் தன்னுள்ளே உணரும் சவிகற்பவுணர்விற்கு ஏதுவாய்க் கண்டஸ்தானம் வரையில் நிற்கும். இந்நிலையில் அது மத்திமை எனப்படும். பின்பு அவ்வாக்குப் பிராண வாயுவினால் உந்தப்பட்டு எழுந்து பல் இதழ் நா அண்ணம் என்னும் உறுப்பு களிற்பட்டு விகாரமடைந்து சிதறித் தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கப்பட்டுச் சவிகற்ப உணர்வு உண்டாவதற்கு ஏதுவாயிருக்கும். இந்நிலையில் அது வைகரி எனப்படும்.

சூக்ஷமை வாக்கானது பரசரீரத்தினுள்ளே ஞானவடிவாக விளங்குதலும் ஆன்ம ஞானத்தை விளக்குதலுமாகிய இரண்டு லக்ஷணங்களையுமுடையது. இவ்வாக்கில் தொழில் கெட்டு ஆன்மா, வாக்குகள் நான்கினுக்கும் வேறாகத் தன்னைக் காணு மாயின், அவ்வான்மாவுக்குப் பேரறிவும் ஆனந்தமும் சுதந்திர மும் நித்தியத்துவமும் உண்டாகும்.

அசுத்தமாயையானது ;—

मयति ददाति विश्वम् इतिवा - मात्यायाति
विश्वमत्रेतिवा. माया. अन्वर्था'

அதாவது உலகத்தைக் கொடுக்கிறது. என்ற பொருளால் காரணப்பெயர் உடையது மாயா என்பது.

அந்த மாயையானது நித்தமாய் தன்னுடைய காரியங்களைக் காரணம் இன்றி வியாபித்திருப்பதாய் வஸ்துரூபமாய் கன்மத் திற்கு இருப்பிடமாய் அசுத்தமாய் பிரளயகாலத்தில் தேகாதி கள் அற்றிருந்த ஆன்மாக்களுக்குச் சிருஷ்டி காலத்தில் காலாதி தத்துவங்கள் தூல சூக்ஷமம் முதலானவைகள் உண்டாவதற்குப் பிறப்பிடமாய், சிவனுக்கு போகசத்தியாகிய பரிக்ரஹ சத்தியாய் இருப்பது. இதற்கு அதோமாயை மோகினி முதலான அனேக பரியாய நாமங்கள் உண்டு.

இந்த மாயை கலை முதல் பிருதிவி வரையில் உள்ள முப்பத்தொரு தத்துவங்களுக்கு உபாதானகாரணமாய் விளங்கும் ஜடசக்தி ஒன்று, நித்தியை.

கன்மம் என்பது :- மனோவாக்குக் காயங்களால் பண்ணப்படுகையால் கன்மம் என்றும், பண்ணின கன்மம் நசித்துப் பலம் உண்டாகுமட்டும் புவனத்திலும் மருந்தெண்ணை வாசனை போல புத்தியிலும் தங்கிக் கண்ணுக்குப்படாதிருக்கையால் அதிருஷ்டம் என்றும், தேகாதிகளைப் பல வகையாய் உண்டாக்குகையால் சனகம் என்றும், எல்லாவற்றையும் தரிக்கையால் தாரகம் என்றும், புசிக்கப்படுகையால் போக்கியம் என்றும் சொல்லப்படுவதாய் ஆத்தியான்மிகம் முதலிய துக்கத்திரயத்திற்குக் காரணமாய், ஆத்மஞானமும் மாயாகாரியங்களும் கூடிய இடத்திலே உண்டாகையால் தர்மாதர்ம ஸ்வரூபியாய். பிரளயகாலத்திலே பக்குவப்படுவதாய். சிருஷ்டிகாலத்தில் தேகாதிகளுக்கு ஏதுவாய் சங்கார காலத்திலே மாயையிலே இருப்பதாய் புசித்தாலொழிய தொலையாமலிருப்பதாய் விளங்குவது.

இது மானசம், வாசிகம், காயிகம் என மூவகைப்படும். மானசம் என்பது இஷ்டதேவதாத்தியானம். பிறர் உடைமைகளை அபகரித்தல் முதலிய புண்ணிய பாபங்கள்.

வாசிகம், என்பது இஷ்ட மந்திர ஜபம் செய்வது. பரநிந்தை செய்வது முதலான புண்யபாபம்.

காயிகம் என்பது :- இஷ்டதெய்வங்களைப் பூஜித்தல் செல்லக்கூடாத விடங்களுக்குச் செல்லுதல் முதலான புண்ய பாபம்.

இந்த மூன்று கன்ம காரணங்களும் மறுபடியும் சுக துக்கங்களுக்கு ஏதுவாய் ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம் ஆதிதைவிகம் என மூன்று விதமாகும்.

மனதிற்கு சந்தோஷம், உத்வேகம் என்பது முதலானது ஆத்யாத்மிகம் ; சந்தனம் பூசிக்கொள்ளுதல் கத்தியினால் வெட்டிக்கொள்ளுதல் முதலானது ஆதிபௌதிகம், விருப்பமுள்ளதாயும் விருப்பமற்றதாயுமுள்ள மழை வெயிலால் முதலானது தைவிகம் எனப்படும். இவ்வாறே கன்மம்; — லௌகிகம், வைதிகம், ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், மாந்திரம் என்று ஐந்து விதமாகும்.

கிணறு குளம் வெட்டுதல், உண்ணக்கூடாததை உண்ணுதல் முதலியவைகளால் உண்டானதாய் நிவிருத்திகலை வரையில் வியாபித்த புவனபோகத்திற்கு உரியதாயுள்ள கன்மம் லௌகிகம் எனப்படும்.

ஜ்யோதிஷ்டோமம் முதலிய அனுஷ்டானத்தினால் உண்டானதாய் ப்ரதிஷ்டாகலையிலுள்ள புவன போகத்திற்குரியதாய் இருக்கும் கன்மம் வைதிகம்.

வைராக்யத்தை உண்டுபண்ணுவதாய் வித்யாகலைவரையில் வியாபித்ததான புவனபோகத்திற்குரியதான கன்மம் ஆத்யாத்மிகம்.

யோகசாதனையினால் உண்டானதாய் சாந்திகலை வரையில் வியாபித்ததான புவனபோகத்திற்குரியதாய் விளங்கும் கன்மம் ஆதிமார்க்கிகம்.

விஞ்ஞானத்தினால் விசேஷ ஞானம் உண்டானதாய் சாந்தியதீதகலையில் வியாபித்த புவனபோகத்திற்குரியதான கன்மம் மாந்திரம் எனப்படும். இவ்வைந்துவித கன்மமும் விஷய சுகதுக்கங்களுக்குக் காரணமாக இருப்பதால் பாசம் ஆகும்.

இத்தகைய கர்மாச்ரயத்தினால் மாயையினின்றும் நேராகவோ பரம்பரையாகவோ முப்பத்தொரு தத்துவங்கள் உண்டாயின. இதனுள் மாயை, காலம் நியதி, கலை, வித்தை, அராகம், புருஷன் என்ற ஏழு தத்துவங்கள் போஜயித்ரு காண்டம் எனப் பெயர்.

பிருகிருதி, சித்தம், புத்தி, அகங்காரம், மனம், சரோத்திரம், த்வக், சட்சு, ஜிஹ்வை, க்ராணம், வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம், சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி என்னும் இருபத்து நான்கும் அசுத்தபோக்ய காண்டம் என்று பெயர்

இந்த கலை முதலான முப்பத்தொரு தத்துவங்களால் ஆரப்த்தமான சரீரம் ஆன்மாக்களுக்குப் போக சாதனமாக ஆகிறது.

[தொடரும்]

அன்புக் கோயில்

திருநெறிச்செம்மல்
வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.

அன்பு வாழ்க்கையின் ஆணிவேர். அன்பு, என்ற பண்பின் அடிப்படையில்தான் வாழ்க்கை என்னும் மாளிகை கட்டப் பெற்றுள்ளது. எல்லா உயிர்களிடத்தும் இப்பண்பு ஒருசில வேளைகளில் அமைந்திருந்தாலும் மக்கள் உயிர்களிடத்துத்தான் அப்பண்பு மேலோங்கி நிற்கிறது. மனைவி மக்கள் உற்றார் பெற்றோர் உறவினர் முதலியோர்பால் நாம் செலுத்தும் பாச உணர்ச்சியைக்கொண்டு இப்பண்பு நம்பால் அமைந்திருப்பதை நாம் நன்கு உணரலாம். நம்மால் அன்பு செலுத்தப்படுவோர்க்குத் துன்பம் விளையும்போது நம் மனம் துன்புறுவதையும் அவர்கட்கு இன்பம் விளையும்போது நம் உள்ளம் மகிழ்வடைவதையும் உணர்கிறோம். இதற்குக் காரணம் அவர்களிடத்தில் நாம் செலுத்தும் அன்புதானே.

அன்பு என்ற பண்பு நம்பால் வளர வளர நாம் உயரலாம். வளர்ச்சிபெறாத அன்பு தன்னலமாக மாறும். ஆதலால் இப் பண்பை நாம் வளர்த்துக் கொள்ளுதல் இன்றியமையாதது. அன்பின் தொடர்புடையவர்களிடத்து மட்டிலும் நாம் செலுத்தி வரும் அன்பைப் பிறரிடத்தும் செலுத்தப் பழகவேண்டும். ஏழை எளியவர்கள் நோயாளிகள் முதலியோரிடத்து நாம் அன்பு செலுத்திப் பழகுதல் வேண்டும். நாட்டு மக்களனைவரும் நம் குடும்பத்தினர் என்ற உணர்வை வளர்த்துக்கொள்ளல் வேண்டும்.

அன்பு வளர்ச்சியடைந்து தாயாகி அருள் என்னும் குழந்தையை நமக்குப் பெற்றுத்தரும். அருள் என்பது இரக்க உணர்வு. இவ்வுணர்வே நம் வாழ்வைத் தூய்மையுடையதாகச் செய்யவல்லது. உலகில் காணப்பெறும் எல்லா உயிர்களிடத்தும் இவ்விரக்க உணர்வைக் காட்டுகின்ற பண்பு படிப்படியாக

நமக்கு வந்து சேரும். வாடிய பயிர்களைக் காணும்போதுகூட நம் மனம் வாட்டமடையும் நிலையே உயர்ந்த நிலையாகும்.

அன்பு தலையன்பு இடையன்பு கடையன்பு என மூன்று வகைப்படும். தலையன்பு என்பது மேலான அன்பு. சில தாய்ப்பசுக்கள் தன் கன்றை நினைத்து ஒருமுறை அம்மா என அழைக்கும்போது நினைத்தபொழுதே அதன் மடியில் பால் பெருகுவதைக் காண்கின்றோம் அல்லவா? அதுபோல மனத்தால் நினைத்தபொழுதே உள்ளத்தில் அன்பு ஊற்றெடுத்துப் பெருகும் நிலையைத்தான் மேலான அன்பு என்று சொல்லுவர். சில பசுக்கள் கண்களால் தன் கன்றைக் காண்கின்றபோது தன் மடியில் பால் பெருகி நிற்பதைக் காண்கிறோம். அதுபோல நம்மால் அன்பு செய்யப்படுபவரைக் காணும்போது மட்டிலும் அன்பு செலுத்துவதை இடையன்பு என்று கூறுவர். கன்று முட்டி உண்ணச் சுரக்கும் பசுப்போன்றவர் கடையன்புடையவர்.

அன்புள்ளம் கொண்டவர் மற்றவர்க்கு உதவும் மனப் பண்புடையவராய் விளங்குதல் உறுதி. இத்தகைய பண்புடையார் என்றும் இவ்வுலகில் புகழுடம்போடு விளங்குவர். பிறர் துன்பத்தைக்கண்டு தன் உடல் பொருள் உயிர் மூன்றையும் வழங்கும் இயல்புடையவர்களும் இவ்வுலகத்தில் இருக்கின்றார்கள்.

சிபி என்னும் மன்னன் அன்பின் அடிப்படையிலே அரசமைத்தவன். எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டும் ஏந்தலாக இவன் விளங்கினான். இவனுடைய இக்குணத்தை இவன் மன உறுதியைச் சோதிக்க இவன் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஒருநாள் காலை நேரம். சிபிச் சக்கரவர்த்தி அரண்மனை முற்றத்தில் வீற்றிருக்கின்றான். அந்த வேளையில் புறா ஒன்று அஞ்சி நடுங்கி "அபயம் அபயம்" என்று அவனைச் சரணடைந்தது. மன்னன் அடைக்கலமாகத் தன்னை வந்தடைந்த புறாவை அன்போடு எடுத்து உனக்கு நேர்ந்தது என்ன? என்று வினவுகிறான். உடனே அச்சிறு புறா என்னைக் கொடிய பருந்து ஒன்று துரத்தி வருகிறது. நீ காப்பாற்ற வில்லையானால் என்னுயிரை அது பறித்துவிடும். ஆதலால் நீ என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டது. மன்னனும் அதற்கு உடன்பட்டான். சிறிது நேரத்தில் புறாவைத் துரத்திய பருந்து அரசனை

அடைந்தது. தான் துரத்திவந்த புரு மன்னன் மடியில் இருப்பதைக் கண்டு இது எனக்குச் சொந்தமானது. என் இரையைக் கொடுத்துவிடு என்று கேட்டது. மன்னன் அடைக்கலம் புகுந்த உயிரை ஆதரித்து அன்பு செய்வது என் கடமை. இதையன்றி எதைக் கேட்டாலும் கொடுப்பேன் என்று கூறினுன். பருந்தும் புருவைக்கொடுக்க மனமில்லையானுல் புருவின் எடையளவு தசையை உன் உடம்பிலிருந்து அரிந்து கொடு அப்போது தான் உடன்படுவேன் என்று கூறிற்று. சிபிச் சக்கரவர்த்தி அதற்கு உடன்பட்டு தன் உடம்பிலுள்ள உறுப்புக்களை ஒவ்வொன்ருகப் புருவின் எடைக்கு ஈடாக அரிந்துவைத்தான். எவ்வளவுவைத்தும் புருவின்எடைக்குஈடாகத் தட்டு சமமடையவில்லை. மன்னன் வியந்து தானே தராசுத்தட்டில் ஏறி அமர்ந்தான். புருவின் எடைக்கு ஈடாகத் தட்டுகள் சமமாயின. இதைக் கண்டு விண் ணுலகத்தோர் வியந்தனர். மண் ணுலகத்தவர் மன்னனின் அன்புணர்ச்சியைப் புகழ்ந்தனர். பருந்தாகவும் புருவாகவும் இவனைச் சோதிக்க வந்த இந்திரனும் யமனும் பருந்து புரு வடிவங்கள் நீங்கி மன்னன் முன் காட்சி அளித்து மன்னன் வேண்டிய வரங்களைத் தந்தனர். இத்தகைய ஜீவகாருண்ய உணர்ச்சி அன்பின் சிறப்பு நிலைகளில் ஒன்று. இதைத்தான் வள்ளுவர்,

" அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு " என்று கூறினுர்.

இப்பண்பை வாழ்க்கையில் நாம் வளர்த்துக்கொள்வதற்கு முயற்சிசெய்யவேண்டும். ஒவ்வொருவரிடமும் நாம் செலுத்துகின்ற அன்பே அவர்கள் நம்பால் செலுத்துகின்ற அன்பிற்குக் காரணமாகும். ஆதலால் குழந்தைப் பருவத்தில் பள்ளிச் சிறுவர் பலரிடத்தும் அன்புகொண்டு ஒழுகுதலும், இளமைப் பருவத்தில் எல்லோரிடத்தும் அன்புகொண்டு ஒழுகுதலும் வேண்டும். மற்றவர் படுகின்ற துன்பங்களுக்கு இரங்குகின்ற இரக்க உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. நோயாளிகளிடத்தும், ஏழைகளிடத்தும் இரக்க உணர்ச்சியோடு பழகுதல் வேண்டும்.

வாழ்க்கையில் தன்னுடைய எலும்பையும் மற்றவர்களுக்கு உரியதாகச் செய்கின்ற மனப்பான்மை கொண்டவர்களும்

இருக்கத்தான் செய்கிறார்கள். இரத்த தானம், பார்வை இழந்தவர்களுக்குத் தன்கண்ணை அளிக்கும் தானம் ஆகியவைகளைச் செய்ய முன்வருகின்ற அன்புடையவர்கள் பிறர்க்கென வாழ்கின்ற பெரியோர் ஆவார்.

கடவுள் அன்பின் வடிவமானவன் என்பது எல்லா சமயக் கொள்கை உடையோரும் கூறுகின்ற கருத்தாகும். அவ் அன்புடையவர் உள்ளத்திலேயே கடவுள் குடிகொள்வான். அவர்களே அன்புக் கோயில்களாக நாட்டில் விளங்குவர்.

விசேஷ நாட்கள்

10—11—68 முதல் 10—12—68 முடிய

11—11—68	சத்திநாயனார் திருநக்ஷத்திரம்
15—11—68	கடைமுழுக்கு
18—11—68	பிரதோஷம்
22—11—68	மூர்க்கநாயனார் திருநக்ஷத்திரம்
23—11—68	சிறப்புலிநாயனார் ,,
2—12—68	பிரதோஷம்
3—12—68	வேளூர் கிருத்திகை, கணம்புல்லநாயனார் திருநக்ஷத்திரம்
4—12—68	சர்வாலய தீபம் (கார்த்திகை சோமவாரத்தில் கடலூரில் சங்காபிஷேகம்)

கலைவளர் மாளிகை

திரு. அ. கலியபெருமாள் M. A.

(மலர் 27, இதழ் 11, பக்கம் 518இன் தொடர்ச்சி)

தூம்பு என்னும் வாச்சியம் யானையின் கைபோல் அமைந்திருப்பதை மலைபடுகடாமும் ''கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பு'' எனக் குறித்தல் காண்க. பதலை என்பது ஒரு பக்கமே இசைத்தற்குரிய ஒருகண் மாக்கிணையேயாம். அது யானையின் அடியைப்போன்ற வடிவுடையது என்பது பல பாக்களால் தெரியவருகிறது.

'' பெருங்களிற் றடியில்தோன் றும் ஒருகண்
இரும்பறை '' (புறம் - 263)

'' பொருகளிற் றடி வழிஅன்ன என்கை
ஒருகண் மாக்கிணை ஒற்றுபு கொடாஅ'' (புறம் - 393)

'' கடாஅ யானைக் கால்வழி அன்னஎன்
தெடாரி '' (புறம் - 368)

கூத்தர், விறலியர் முதலிய கலைஞர்கள் வாச்சியங்களைப் பையிலிட்டுக் காவடித் தண்டின் இருபக்கமும் கட்டித் தோளில் சுமந்து செல்வர். இசைக்கருவிகள் இடும் பையினைக் கலப்பை எனக் கவிஞர் குறிக்கின்றனர். முழவு, ஆகுளி, தூம்பு, பதலை முதலிய வாச்சியங்களை இட்டபை பலாக்காய் போன்றுள்ளது என்று மலைபடுகடாம் கூறுகிறது.

'' கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர் ' (மலைபடு. 12-13)

ஒரு பக்கம் ஒருகண் மாக்கிணை தொங்க, மறுபக்கம் துளையை அகத்தே உடைய சிறிய முழவு தொங்கக் காவடித் தண்டை விறலி தூக்கிச் செல்வதை ஔவையார்,

" ஒருதலைப் பதலை தூங்க ஒருதலை
தூம்பகச் சிறுமுழாத் தூங்கத்தூக்கி " (புறம் - 103)

என்று குறிப்பிடுகிறார். அதியமான் நெடுமான் அஞ்சி, பரிசில் நீட்டித்தவழி வருத்தமுற்று இசைக்கருவிகளைத் தோளிற் சுமந்தார். வாச்சியங்களைப் பையிலிட்டுக் கட்டினார். "எத்திசைச் செலினும் அத்திசைச்சோறே"[7] என்று புறப்பட்டு விட்டார்.

" காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறுஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" (புறம்-206)

இசைக் கருவிகள் பெய்தபையினை உடைய பாணரைப் பதிற்றுப்பத்து "மென்சொற் கலப்பையிர்" (பதிற். 15) என்று குறிப்பிடுகிறது. முழவும், பதலையும், பிற இசைக்கருவிகளும் பெருவங்கியமும் கட்டிய காவடியின் மறுபக்கத்தே பாடல் துறைகளுக்கு வேண்டிய கருவிகளையெல்லாம் பெய்த பையினைச் சுமந்தவர் என்று பதிற்றுப்பத்து 41-ம் பாடல் கூறுகிறது.

" பண்ணமை முழவும் பதலையும் பிறவும்
கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக்
காவில் தகைத்த கலப்பையர் '

வாயைச் சுருக்கிக் கட்டிய பல்வேறு இசைக்கருவிகள் பெய்த பையினை உடையன் என்று அகம் கூறுகிறது.

" தலைப்புணர்த் தசைத்த பல்தொகைக் கலப்பையர் "
(அகம் - 301)

தமிழர் தனிப்பெருங் கலையாகக் கூத்தினை வளர்த்தனர். கதையினைத் தழுவியும், கதை தழுவாமல் பாட்டின் பொருளுக்கு ஏற்ப அபிநயம் செய்யும் பல்வகைக் கூத்துக்களையும் நடத்தும் ஆற்றல் பெற்றிருந்தனர். கூத்தர் என்பார் தமிழகத்தின் ஊர் தோறும் கூத்துக்களை நடத்திக் காட்டினர். இக்காலத்து நாட்டியம் நாடகம் எல்லாம் இதன்பாற் பட்டவையே. கூத்து என்பதற்கு இடம் நோக்கி ஆடலென்றும், நாட்டியம் என்றும், நாடகம் என்றும் பழங்காலத்து உரையாசிரியர் பொருள் எழுதியிருக்கின்றனர்.

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில் '' இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து '' என்று ஓரடி வருகிறது. ஈண்டு இருவகைக்கூத்து சாந்தியும் விநோதமுமாம் என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். இவையே அன்றி, இருவகைக்கூத்து. வசைக்கூத்து, புகழ்க்கூத்து : வேத்தியல், பொதுவியல்; வரிக் கூத்து வரிச்சாந்திக் கூத்து; எனப் பல்வகைப்படும் என்பதை அடியார்க்கு நல்லார் கூற்றால் அறியலாம். சாந்திக் கூத்து சொர்க்கம், மெய்க்கூத்து, அவிநயக் கூத்து, நாடகம் என நால் வகைப்படும். இவற்றுள் அபிநயக்கூத்து கதைதழுவாது பாட்டின் பொருளுக்கு ஏற்ப அபிநயம் செய்யும் பல்வகைக் கூத்துக்களாம். நாடகம் கதை தழுவி வரும் கூத்தாகும். விநோதக்கூத்து, குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு. தோற்பாவை முதலியன. இவற்றுள் தோற்பாவை: தோலாற் பாவைசெய்து ஆட்டுவிப்பதாம்; இக்காலப் பொம்ம லாட்டத்தைப் போன்றதாகும்.

வேத்தியல், பொதுவியல், இரண்டையும் இளங்கோ தம் காட்பியத்தில் குறிக்கிறார்.

'' வேத்தியல் பொதுவியல் என்றிருதிறத்தின்
நாட்டிய நன்னூல் '' (அரங்கேற்றுகாதை 39 - 40)

'' வேத்தியல் பொதுவியல் என இருதிறத்து
மாத்திரை அறிந்து மயங்கா மரபின் ''
(ஊர்காண்காதை 148 - 49)

அரசருக்காக ஆடுங்கூத்து வேத்தியலாகும். பொதுவியல் எல்லோர்க்கும் ஒப்ப ஆடும் கூத்தாம். அல்லியம் முதலான பதினோரு ஆடல்கள் சிலம்பில் விரிவாகப் பேசப்படுகின்றன.

'' பல்வகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்தும்
பதினோராடலும் பாட்டும் கொட்டும் ''
(அரங்கேற்று 13 - 14)

'' அவரவரணியுடன் அவரவர் கொள்கையின்
நிலையும் படிதமும் நீங்கா மரபிற்
பதினோராடலும் பாட்டின் பகுதியும் ''
(கடலாடுகாதை 64 - 66,

மாதவி பதினோராடலுக்கும் புனைந்த கோலத்தைக் கடலாடுகாதையில் பார்க்கிறோம். அக்காதையில் கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியத்தொகுதி, மல்லாடல், துடிக்கூத்து, குடைக்கூத்து, குடக்கூத்து, பேடியாடல், மரக்காலாடல், பாவையாடல், கடைசிக்கூத்து ஆகிய பதினோரு கூத்துக்களும் கூறப்படுகின்றன. இவற்றின் விரிவைக் கடலாடு காதையுள் (45 - 63) கண்டுகொள்க.

பல்வகைக் கூத்துக்களுள், குரவைக்கூத்து, சங்கப்பாக்களில் மிகுதியாகப் பேசப்படுகிறது. குரவைக்கூத்து, காமமும் வெற்றியும் பொருளாகக்குரவைச்செய்யுள் பாட்டாக எழுவரோ ஒன்பதின்மரோ கை பிணைந்தாடும் கூத்தாகும். சல்லிகையும், கரடிகையும் முழங்குகின்றன. குறிஞ்சிப்பூவைச் சூடி முருகனை வழிபட்டு மன்றுகள்தோறும் மகளிர் தம்முன் தழுவிக் கை கோத்துக் குரவையாடுகின்றனர். இக்காட்சியை மதுரைக் காஞ்சி எடுத்துரைக்கிறது.

" கடுஞ்சூல் மகளிர் வேணிக் கைதொழுது
பெருந்தோட் சாலினி மடுப்ப ஒருசார்
அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூடு இன்னியம் கறங்கநேர் நிறுத்துத்
கார்மலர்க் குறிஞ்சி ஆடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேள் பேணிக் கழூஉப் பிணையூஉ
மன்று தொறும் நின்ற குரவை " (மதுரைக் 609 - 615)

அதே பாட்டில் மாங்குடி மருதனார்,

" மணிப்பூ குண்டத்து மணல்மலி காவில்
பரதவர் மகளிர் குரவை " (மதுரைக் 96 - 99)

என்று கூறியிருத்தலும் காண்க.

சிறுபறை கல்லென ஒலிக்கக் கள்ளுண்ட குறவர் தம் பெண்டிரோடு விண்ணகம் தீண்டும் மலையுச்சியில் குரவை அயர்வதை மலைபடுகடாம் காட்டுகிறது.

" நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு
மான்தோல் சிறுபறை கறங்கக் கல்லென
வான்தோய் மீமிசை அயரும் குரவை " (மலைபடு 320-22)

குறவன் தேறல் குடித்துக் குரவை அயர்வதைப் புறப்பாட்டிலும் காண்கிறோம்.

(தொடரும்)

வேளூர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி பதிகம்

பூவாளூர்

திரு. சபாபதிச் செட்டியார்

இயற்றியது

நூல்

பூமேவு பூரணச்சந்தி ரோதயமாப்
பொலிந்திலகு மாறு முகமும்
பொற்பங்கயம் பன்னிரண்டலர்ந் தெனவருள்
பொழிந்தொழுகு நயனங்களும்
தூமேவு சொற்களாற் றேத்திரிப் போர்வினை
தொலைக்க மொழியமுத வாக்கும்
தோய்தமிழ்ப்பா மூவகைக்கெளி திரங்குகுழை
தூங்குமீராறு செவியும்
மாமேவு வண்கடம் பார்மாலை புரளுமலை
மானுமுன் னூற் றோள்களும்
வயங்கவென் முன்னமயின் மீதின்முச் சத்தியுடன்
மனமகிழ வந்தருளவை கொண்
மூமேவு மாடமலி புள்ளிருக்கும் வேளூர்
மோனமெய்ஞ் ஞான வடிவே
முத்தரிடமார் தையல் புத்ரனென வந்தருள்
முத்துக் குமார குருவே. 1

வெண்கமல மீதிலமர் வேதாமு னோர்பகல்
விரிந்தசுடர் வெள்ளி வரையின்
மேவியொளிர் முழுமுதற் கடவுளை வணங்கியே
மீளுமவனை விளித்தே
உண்மகிழ்வி னவனை நீ யாவனின் றொழிலெதன
வொளிர்சிட்டி செயும் வேதனென்
றோதமறை யோதென விருக்கோத வொண்ப்ரணவ
வுண்மையுரை யெனவிழிக்க

இப்பதிகம், வைத்தீஸ்வரன்கோயில், வித்துவான். திரு. மு. முருகையா தேசிகர் அவர்களிடமிருந்த கையெழுத்துப் பிரதியின்படி வெளியிடலாயிற்று.

தண்மலர்க் கையாற்றடா லெனவிடித்துத்
தனிச்சிறை யிருத்தியானின்
றனையன்று தொட்டுண வொட்டாத வாணவத்
தைச்சிறை செய்தாளலரிதோ
முண்மலர்த்தாட் கமலமொய் வயற்புள் வேளூர்
மோனமெய்ஞ் ஞானவடிவே.
முத்தரிட மார்தையல் புத்ரனென வந்தருள்
முத்துக் குமார குருவே. 2

தானவெண்கரியில் வருசதமகன் வாழ்க்கையுஞ்
சதுமுகன்மால் வாழ்க்கையுந்
தக்கசீர்மேவு மித்தரணியாள் வாழ்க்கையுந்
தமியனேன் சிறிதும் வேண்டேன்
வான்றெழு நின்பதும மலரடியின் வாழ்வையே
வள்ளல்யான் வேண்டுவனது
வாய்த்திடப் பரிபாக காலமிலை யெனிலது
மருவுற்ற வெழில் கொடவராந்
தேனினு மினியவன் பார்பெரிய ருக்குயர்
சீரடித் தொண்டு செயவே
தேசுடைத் திருவமார் வாழ்வுமெய்ஞ் ஞானமுஞ்
சிறியனே னுய வீந்தருள்
மோனமருள் ஞானபண் டிதகுரவ வேளூரின்
மோனமெய்ஞ் ஞான வடிவே
முத்தரிட மார்தையல் புத்ரனென வந்தருள்
முத்துக் குமார குருவே 3

அத்தனெனும் வைத்திய நாதனு மெம்பிரான்
அடியவர்க் குற்ற பிணியோ
டிழியாத பவரோகமும் மாறமண்ணளித்
தருள்வன் சிறியேனவற்குப்
பத்திநெறி நிற்கவோ சித்தமது நிலையில்லை
பவசாகரத்துண் மொத்துப்
பட்டதே போதுமினும் வருமெனும் பயமறப்
பளகிலரு ணோக்கமருளி
முத்திநெறி காட்டியம் முதல்வனொடு சேர்த்தருள்
முற்றுமென் வேண்டலிதுவே
முருகனே கரியமால் மருகனே கலிவரத
மூர்த்தியே கைவிடேல் தென்

முத்தமிழ்ச் சோணாட்டிலுத்தம வேளூரில்வளர்
மோனமெய்ஞ் ஞான வடிவே
முத்தரிட மார்தையல் புத்ரனென வந்தருள்
முத்துக் குமார குருவே. 4

அண்ட மோராயிரத் தெட்டு நூற்றெட்டுகம்
ஆண்டமாச் சூரபத்மன்
அவற் கிளையவரி முகன் தாருகனி வர்களழி
யாதவச் சிரதேகமும்
புண்டரிகன் மாலண்டர் போற்றும் வாழ்வும்வெற்பும்
பொடியாக வடிவேல் விடும்
பூரணகாரண புவனநாதா வெனப்
போற்றுது நித்த நித்தம்
கண்டுமொழி காலனிகர் பெண்டுபொருள் புவியையே
காதலித் துழலூசல் போல்
கலங்கிடச் செய்ம்மல வலங்கெடவல் வேற்கருள்
கருணாநிதித் தெய்வமே
முண்டகாசனை யிருவர் தொண்டுசெயும் வேளூரின்
மோனமெய்ஞ் ஞான வடிவே
முத்தரிட மார்தையல் புத்ரனென வந்தருள்
முத்துக் குமார குருவே. 5

பஞ்சதரு நீழலுரு பண்ணவர்க்க ரசீன்ற
பான்மொழிக் கடவுள் யானைப்
பகர்நாம மேவியொளிர் பச்சைப் பசுங்கொடியைப்
பண்பாக வேட்டு மன்றிப்
பஞ்சன்ன மென்னடைப் பங்கய மானீன்ற
பாவை வேட்டுவ வள்ளியாம்
பணைமுலைப் பூங்கொடி யையுந்தேடி மயிலேற்றும்
பான்மைகண் டுனது பொன்சீர்
செஞ்சரண மேத்துசீர் மேயவடி யாரோடு
சேர்த்தாள் வையென வடைந்தேன்
சிறுவேதிகாணு முன்னிரும்பு பொன்னாகுமே
சிறியேனை யாள லரிதோ
முன்சடா யுக்கருள் செய்புள்ளிருக்கும் வேளூர்
மோனமெய்ஞ் ஞான வடிவே
முத்தரிட மார்தையல் புத்ரனென வந்தருள்
முத்துக் குமார குருவே. 6

தென்பொலியு நங்கருணை வான்றவம் முற்றிச்
செழித்த சிவஞானியர்க்கே
சேருதற்குரியது நினக்கரிய தென்னிற்
செறிந்த சிவஞான நிலையும்
மன்பதைக ளுன்னருளின் மாட்சிபெரிதில்லாது
மருவுறுதுணை ராதுநான்
மடமையாற்றீமையே செய்திடினு மீன்றநீ
மாண்கிருபை யாலிரங்கி
யின்பமருளிணையில் சிவஞான போதத்துடன்
யியற்கருவி நூலுணரவைத்
தெனதுயா னென லற்றயின்ப வாரிதிமூழ்கி
யேக்கற்றிருக்க வருள்வாய்
முன் புனிதநல்கும் முத்ததட வேளூரின்
மோன மெய்ஞ்ஞான வடிவே
முத்தரிடமார் தையல் புத்ரனென வந்தருள்
முத்துக் குமார குருவே. 7

வேதபுரி கந்தபுரி பரிதிபுரி யென்னவுயர்
வேளூர் முதற்றளியினும்
வீறுபுக ழாறுபடை வீடா றெழுத்தினும்
வேதாகமம் முடிவினும்
ஓதவரு மொப்பற்ற பிரமநீ யடிமையா
முனையுண ரொணுது மறைசெய்
தூழிமுத லொன்றுமல பந்தமற வருள்புரியென்
உண்மையடி யாருள்ளமாம்
போதமலி தீந்தேன் பெருக்கூற் றெடுத்துநிறை
பொற்கமல வாவி யிடையும்
பூத்தலர்ந்தொரு கந்தம் புவன நிறைபூம்பதம்
புணர்சுத்த மீந்தருள் வைவிண்
மோதவளர் சோலையில் சோதிமதி தவழ்வேளூர்
மோனமெய்ஞ் ஞான வடிவே
முத்தரிட மார்தையல் புத்திரனென வந்தருள்
முத்துக் குமார குருவே 8

முத்துநேர் மூரலும் பவனவாயின் கிளவி
முழுமதிய மன்ன முகமும்
மோகவா ரிதிதள்ள வேகமுட னேதாவு
மோதுவே லன்ன விழியும்

அத்தியன மென்னடை யரிவைய ரெனுங்கூற்றிற்
காளாகி வாடாது நின்
னடிமலர்க் கனுதினமு மன்புபுரி யன்பரொடும்
அடியேனு மொருவனுகி
செத்துப் பிறக்கின்ற தெய்வங்களைச் சிறிதுஞ்
சிந்தியா தொழிவி லன்பாற்
சீரடிப் புகழ்பேச வஞ்சாத வாக்குமருள்
சித்தாந்த முத்தி முதலே
முத்துவட மார்வள்ளி மோகனு வேலூரின்
மோன மெய்ஞ்ஞான வடிவே
முத்தரிட மார்தையல் புத்ரனென வந்தருள்
முத்துக் குமார குருவே 9

சரவணப வாயநம சண்முக சிவாயநம
சடக்கர ரூபாயநம வோம்
தரணிதரு சிட்டிதிதி சம்மார கர்த்தநம
சம்மந்த மூர்த்தே நம
அரகரகு காயநம வன்பர்கள் சகாயநம
வாறிருபு யாசலநம
அண்ணனி னொருபெயர் மருவுமெங் குலமோங்க
வருள்புரிவை காமர்பதியின்
வரமழை பொழிவள்ள லாமுனதின் னருளினுல்
வளர்சைவ சித்தாந்த மாம்
மாசங்க மோங்கவு மப்புணை கொடன்பினுன்
மலர்ப்பாத மேவவருள் வாய்
முரகரியு மேத்துபுகழ் புள்ளிருக்கும் வேலூர்
மோன மெய்ஞ்ஞான வடிவே
முத்தரிட மார்தையல் புத்ரனென வந்தருள்
முத்துக் குமார குருவே. 10

செய்திகள்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

ஜன்மநக்ஷத்திர விழா

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்களது ஜன்மநக்ஷத்திர விழா திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 20—10—68 ஞாயிற்றுக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி ஸ்ரீ அமிர்தகடேசப்பெருமான், ஸ்ரீ அபிராமி அம்மை, ஸ்ரீ காலசம்காரமூர்த்தி முதலிய மூர்த்திகளைத் தரிசனம் செய்து தருமைக்கு எழுந்தருளினார்கள்.

கந்தசஷ்டி வழிபாடு

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் வழக்கம்போல் இவ்வாண்டும் 20—10—68 ஞாயிற்றுக் கிழமை அன்று கந்தசஷ்டி தரிசனத்திற்குத் திருச்செந்தூருக்கு எழுந்தருளினார்கள். கந்தசஷ்டித் திருவிழா நாட்களில் உபவாசத்துடன் மௌனத் தவமிருந்து செந்திற்குமரனை வழிபட்டு மகிழ்ந்தார்கள். இந்நாட்களில் முருகன் தோத்திரப் பாமாலைகள், திருமுறைப் பாராயணங்கள் முறையே நிகழ்ந்தன. சஷ்டித் திருநாளில் சூரசம்கார தரிசனம் செய்து திருநெல்வேலிக்கு எழுந்தருளினார்கள்.

கந்தஷஷ்டி விழா

குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் மாயூரம் குமரக் கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிசுவாமி தேவஸ்தானத்தில் 21—10—68 திங்கட்கிழமை முதல் முருகப்பெருமானின் சிறப்புத் திருநாளாகிய கந்த சஷ்டித் திருநாள் தொடங்கி ஆறு நாட்கள் நடைபெற்றது. 25—9—68 வெள்ளிக்கிழமை யன்று வெள்ளி

ரிஷபவாகனக் காக்ஷியும், 26—9—68 சனிக்கிழமை வேல் வாங்குதலும், இரவு சூரசம்காரமும், பின்னர் ஸ்ரீ சுப்பிரமணியர் காட்சி கொடுத்தலும் நடைபெற்றன. 27—9—68 ஞாயிற்றுக் கிழமை திருத்தேர்விழா நடைபெற்றது. முருகனை வழிபடுவோர் சஷ்டி உபவாசமிருந்து வழிபட்டு உய்ந்தனர். சஷ்டித்திருநாளை முன்னிட்டு ஸ்ரீ முருகப்பெருமானுக்கு லக்ஷார்ச்சனை 11—10—68 வெள்ளிக்கிழமை முதல் தொடங்கி 26—10—68 சனிக்கிழமை சஷ்டியன்று நிறைவுற்றது. அன்பர்கள் பலர் கலந்து கொண்டனர்.

குமார விலாச பிரசங்க சபாமண்டபத்தில் நாள்தோறும் மாலை 6·மணி முதல் கீழ்க்காணுமாறு "கந்த புராண" கதா காலட்சேபம் நடைபெற்றது. தருமையாதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர, சங்கீத சாகித்ய வல்லப, கதா ரசாஸ்வாதக, பாகவதர், எம்பார், ஸ்ரீமத். விஜயராகவாச்சாரியார் குழுவினரால் நிகழ்த்தப்பெற்றது.

22-10-68 செவ்வாய்க்கிழமை திருவவதாரமும், 23-10-68 புதன்கிழமை தாரகன் வதமும், 24—10—68 வியாழக்கிழமை வீரவாகு தூதும், 25—10—68 வெள்ளிக்கிழமை பானுகோபன் வதமும், 26—10—68 சனிக்கிழமை சிங்கமுகன், சூரபன்மன் வதமும், 27—10—68 ஞாயிற்றுக்கிழமை தெய்வயானையம்மை, வள்ளியம்மை திருமணமும் ஆகிய தலைப்புக்களில் கதாகாலட்சேபம் நடைபெற்றது. நாள்தோறும் முருக பக்தர்கள் பெருந்திரளாக வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

நவராத்திரி விழா

வேளூர் ஸ்ரீவைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்

26—9—68 வியாழக்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள் தருமையாதீனப்புலவர், சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார். திருநெறிச்செம்மல், நல்லிசைப் புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர். வித்துவான், திருமதி. ப. நீலா ஆகியோர் முறையே "அபிராமி அந்தாதி" "அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்" "மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்

27-9-68 வெள்ளிக்கிழமை முதல் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள் வித்துவான், திருமதி. ப, தீலா. தருமையாதீனப்புலவர், சித்தாந்தக்கலைமணி, மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும், மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், செஞ்சொற் கொண்டல், வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனார் M. A., Dip-Ling அவர்களும் முறையே "சகலகலாவல்லிமாலை" "மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்" "திருவெண்ணீற்றுமையம்மை பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்புக்களில்சொற்பொழிவாற்றினார்கள்.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

26—9—68 வியாழக்கிழமை முதல் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், சிரோமணி, வித்துவான், திரு வி சபேசன். நாகப்பட்டினம் தேசிய உயர்பள்ளித் தமிழ் ஆசிரியர், தருமையாதீனப் புலவர், வித்துவான். திரு. வை மு. சண்முக தேசிகர். திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. தா. ம. வள்ளைவாரணனார் ஆகியோர் "அபிராமி பதிகம்" "அபிராமி அந்தாதி" "அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினார்கள்.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

28—9—68 சனிக்கிழமை முதல் திருப்பனந்தாள் செந்தமிழ் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், திருமுறைச்செம்மல், மதுரகவி வித்துவான், திரு. தா. ம வெள்ளைவாரணனார். சென்னை, திரு. கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார் திருப்பனந்தாள், செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், விததுவான். திரு. மு சுந்தரேசம் பிள்ளை ஆகியோர் முறையே "அபிராமியம்மை பதிகம்" "சகலகலாவல்லிமாலை" "மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்" என்ற தலைபுக்களில் சொற்பொழிவாற்றினார்கள்

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

26—9 68 வியாழக்கிழமை முதல் ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள், திருநெறிச்செம்மல், நல்லிசைப் புலவர், வித்துவான், திரு வி. சா. குருசாமி தேசிகர். தருமை

யாதீனப் புலவர், சித்தாந்தக்கலைமணி, மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும், சென்னை திரு. கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார் அவர்களும் முறையே "மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்" "அபிராமியம்மை பதிகம்" "சகலகலாவல்லிமாலை" என்ற தலைப்புக்களில் சொற்பொழி வாற்றினுர்கள்.

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில்

28—9—68 சனிக்கிழமை முதல் திருவாரூர் உயர்ப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர் திருவையாறு. செய்தியாளர் திரு. G. தனவேல் பிள்ளை. நாகப்பட்டினம் தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர், தருமை யாதீனப் புலவர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் ஆகியோர் முறையே "மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்" "நவராத்திரிச் சிறப்பு" "அபிராமி அந்தாதி" என்ற தலைப்புக் களில் சொற்பொழிவாற்றினுர்கள்.

திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில்

27—9—68 வெள்ளிக்கிழமை முதல் திருவையாறு அரசர் கல்லூரித்தமிழ்ப்பேராசிரியர் வித்துவான். திரு. சொர்ணகாளீஸ் வரன், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் சிரோமணி. வித்துவான். திரு. வி சபேசன், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், சிவநெறிச்செல்வர். வித்துவான். திரு. K. M, வேங்கடராமையா M. A. ஆகியோர் முறையே "மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்", "அபிராமி அந்தாதி", "சகலகலாவல்லிமாலை" என்ற தலைப்புக்களில் சொற்பொழி வாற்றினர்.

ஏனைய தேவஸ்தானங்களில் :

மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி தேவஸ்தானத்தில் 25—9—68 புதன்கிழமை மாலை வித்துவான், திரு. சி. அருணை வடிவேல் முதலியார் "உண்ணுமுலையம்மை பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்பிலும், மாயூரம் - வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசு வரசுவாமி தேவஸ்தானத்தில் 25—9—68 புதன்கிழமை மாலை 6 மணிக்கு வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் "அபிராமி அந்தாதி" என்ற தலைப்பிலும், திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாத சுவாமி தேவஸ்தானத்தில் 28—9—68

சனிக்கிழமை மாலை சிதம்பரம் வித்துவான். திரு. ச. சேதுசுப்பிர மணியப் பிள்ளை "அபிராமி அந்தாதி" என்ற தலைப்பிலும், பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 29-9-68 ஞாயிற்றுக்கிழமை மாலை வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் "அபிராமியம்மைப் பதிகம்" என்ற தலைப்பிலும். ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானத் தில் 29—9—68 ஞாயிற்றுக்கிழமை மாலை சிதம்பரம் வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை "திருவெண்ணீற்றுமை யம்மை பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்பிலும். பேரளம் ஸ்ரீ சுயம்பு நாதசுவாமி தேவஸ்தானத்தில் 29—9—98 ஞாயிற்றுக்கிழமை மாலை வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் "அபிராமி அந்தாதி" என்ற தலைப்பிலும், குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 30—9-68 திங்கட்கிழமை மாலை வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனூர் M. A., Dip - Ling., "அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்பிலும், கொறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்திலும், தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி தேவஸ்தானத் திலும் 30—9—68 திங்கட்கிழமை வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் முறையே "மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்" "அபிராமி அந்தாதி" என்ற தலைப்புக்களிலும், 1—10-68 செவ்வாய்க்கிழமை மாலை விளநகர் ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார் சுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் 'அபிராமியம்மை பதிகம்" என்ற தலைப்பிலும் சொற் பெருக்காற்றினார்கள். ஆங்காங்கும் அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

நவராத்திரி விழா

சென்னைத் தியாகராய நகரில் உள்ள தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில் 23—9—68 முதல் 30—9—68 முடிய நவராத்திரிவிழா மிகச் சிறப்பாகக் கொண் டாடப்பெற்றது. முதல்நாள் விழாவைத் திருமதி சௌந்திரா கைலாசம் அவர்கள் தொடங்கிவைத்து மௌனம்தான் இயற்கை யின் மொழி என்றும், மௌனத்தில்தான் ஞானம் சிறக்கிறது என்றும், அன்னையைக்குறித்து நாமும் நம்மால் இயன்றவரை விரதம் இருந்து அன்னையை வழிபடுவதால் எல்லா நலமும் நமக்கு உண்டாகும் என்றும் அருளாளர்களின் பாடல்கள்

சிலவற்றை ஒரு மண்டலம் நியதியாகப் பாராயணம் செய்தால் செய்பவர்களுக்குப் பலன் கிடைப்பது நன்ருகத் தெரியும் என்றும் குறிப்பிட்டார்கள்.

எட்டு நாட்களிலும், மணலி தமிழ்க்கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. இரா. செல்வக்கணபதி ''அபிராமி அந்தாதி'' க்கு விரிவுரை ஆற்றிச் சிறப்பித்தார். பேபி கிரிஜா குழுவினர், குமாரி சம்யுக்தா குழுவினர் முறையே காரைக்காலம்மை, பார்வதி திருமணம், கண்ணப்பர், வள்ளித் திருமணம், திருநீலகண்டர், ருக்மணி கல்யாணம், மீனுட்சியம்மை திருமணம் பற்றி கதாகாலக்ஷேபம் நிகழ்த்தினர். தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறி விழாவைச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். தினந்தோறும் மீனுட்சியம்மைப் படத்திற்கு லலிதா சகஸ்நாம அர்ச்சனையும், அபிராமி அந்தாதி பாராயணமும் நிகழ்த்தப்பெற்றன. ஒவ்வொருநாளும் அர்ச்சனை வழிபாட்டை திரு. எஸ். எம். சுப்பிரமணிய முதலியார், திரு. ஆர். மாசிலாமணி முதலியார், திரு. கே. கமலக்கண்ணன், திருமதி. தாக்ஷாயணி அம்மாள் திரு. எம். சந்திரசேகர முதலியார், ஜே பி. திரு. எம். ஆர். தாமோதரன், திரு. டி. என். உடையநம்பி நாடார் ஆகியோர் உபயமாக ஏற்றுச் சிறப்புற நடத்தி வைத்தனர்.

நுங்கம்பாக்கத்தில் 114 ஆவது மாத வழிபாடு

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தின் 114வது மாத வழிபாடு 29—9—63 ஞாயிறு மாலை நுங்கம்பாக்கம் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டுக் குழுவினர் சார்பில் சுவாமி அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன, ஆலய அறங்காவலர் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக உடனிருந்து நடத்திவைத்தார்கள். தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவர்க்கும் நன்றி தெரிவித்து வாழ்த்துக் கூறினர்கள்.

திருமுறை வகுப்பு, சமஸ்கிருத வகுப்பு ஆண்டுவிழா

சென்னைத் தியாகராய நகரிலுள்ள தருமை ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில் நடைபெற்றுவரும் திருமுறை வகுப்பின் 15வது ஆண்டு விழாவும், சமஸ்கிருத வகுப்பின் 10வது ஆண்டு நிறைவு விழாவும் விஜயதசமியன்று (1—10—1968) மாலை இந்து அறநிலையத்துறை ஆணையர்

திரு. ஆ. இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஆணையர் இருவகுப்பு மாணவ. மாணவியர்கட்கும் பரிசுகள் வழங்கிப் பேசுகையில் தமிழகத்தில் சமய நெறியைப் பரப்பி வரும் தருமை ஆதீனம் தமிழ்க்கல்லூரி, தேவார பாடசாலை ஆகம பாடசாலை, அனாதை இல்லம் முதலியன வைத்து நல்ல முறையில் நடத்தி வருவதை நேரில் பார்த்து வருகின்றேன். இப்பிரசார நிலையமும் பதினைந்து ஆண்டுகளாக நாட்டு மக்களுக்கு நல்லமுறையில் சேவைசெய்து வந்துள்ளது பாராட்டதக்கது. தம்பிரான் அவர்கள் சொல்லியபடி பெற்றோர் கள் தத்தம் பிள்ளைகளை இந்நிலையத்திற்கு சமயப் பயிற்சிபெறச் செய்வார்கள் என்று நம்புகின்றேன். பரிசுபெற்ற குழந்தைகள் ஊக்கமாகப் படித்து வாழ்விலும் வெற்றிபெறுவார்கள் என்று நம்புகின்றேன் என்று குறிப்பிட்டார்கள். தவத்திரு சோமசுந் தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள்.

ஸ்ரீபெரும்பூதூரில் 115 ஆவது மாத வழிபாடு

நிலைய மன்றத்தின் 115வது மாத வழிபாடும், சமயப் பிர சாரமும் ஸ்ரீ பெரும்பூதூரில் உள்ள ஸ்ரீ பூதபுரீசர் ஆலயத்தில் 27—10—68 ஞாயிறு காலை சிறப்பாக நடைபெற்றன. வழி பாட்டுக் குழுவினர் சார்பில் சௌந்தரவல்லி அம்பாள் உட னுறை ஸ்ரீ பூதபுரீசருக்கு அபிஷேக ஆராதனைகளும், ஸ்ரீபெரும் பூதூர் வார வழிபாட்டுக் குழுவினர் சார்பில் 108 சங்காபிஷேக மும், திருமுறை ஊர்வலமும் நன்முறையில் நடைபெற்றன. அறங்காவலர்களும், வார வழிபாட்டு அன்பர் திரு. ஆறுமுக முதலியார் அவர்களும் திரு பி. எஸ். நமச்சிவாயச் செட்டியார் அவர்களும் நிலைய வழிபாட்டுக் குழுவினரை வரவேற்று வழி பாட்டையும், சமயப் பிரசாரத்தையும் உடனிருந்து நடத்தி வைத்தார்கள். திரு. பி. எஸ். நமச்சிவாய செட்டியார் குழுவி னருக்கு மதிய உணவளித்து உபசரித்தார்கள். வழிபாட்டின் பின்னர், சென்னை வித்துவான், திரு சி வடிவேல் பிள்ளை அவர் கள் மக்கள் இறைவனை வழிபடவேண்டிய அவசியம்பற்றிப் பேசினார்கள். தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திருமுறைகளின் பெருமை பற்றியும், அவற்றை ஓதுவதாலும், ஓதி வழிபடுவதாலும் மக்கள் அடையும் பலனைப் பற்றியும் நாள் தோறும் இறைவனை வழிபடுவதால் கிடைக்கும் நலம்பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். ஏராளமான பக்தர்கள் திருமுறை ஊர்வலத்திலும், வழிபாட்டிலும் சமயப் பிரசாரத் திலும் பங்குகொண்டு பயன்பெற்றார்கள்.

ஸ்ரீ மெய்கண்டதேவர் குருபூஜை விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 22—10—68 செவ்வாய்க்கிழமை சுவாதி நட்சத்திரத்தன்று மாலை ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனர் குருபூஜை திரு. N. இராமமூர்த்தி அய்யர் உபயமாக மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. நிலையப் பிரார்த்தனை மண்டபத்தில் உள்ள ஸ்ரீ கயிலாயநாதர் படத்திற்கும், ஸ்ரீமெய்கண்டார் படத்திற்கும் திருமுறை அர்ச்சனை செய்து வழிபாடு நிகழ்த்தப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி உயர்திரு. R. சதாசிவம் அவர்கள் தலைமையில் தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் பேசினார்கள். இலக்கியத்தினின்றும் இலக்கணந் தோன்றும்; மக்கள் வாழ்விலிருந்து சட்டம் தோன்றும் என்பதைப்போல், தோத்திரத்தினின்றும் சாத்திரம் தோன்றியது. சைவதோத்திரமாகிய திருமுறையின் பயனாகத் தோன்றியவர் மெய்கண்டார். இவரே சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் முடிமணியாகத் திகழும் சிவ ஞான போதத்தை அருளி, தமிழின் பெருமையை, சைவத்தின் சிறப்பை உலகறியச் செய்தவர். திருமுறைகளில் கயிறு சார்த்திப் பார்க்கும் வழக்கத்தை முதன்முதலில் நமக்குக் காட்டியவர் திருஞான சம்பந்தரே. அவர் அனல் வாதத்தில் ஈடுபட்டபோது தாம் அருளிய தேவாரத்தில் கயிறு சார்த்தினார். "போகமார்த்த" என்னும் திருநள்ளாறு பதிகம் கிடைத்தது. அதனைத் தீயில் இட்டார். பச்சென்றிருந்தது. இந்த வழியில்தான் மெய் கண்டார் தந்தையார் பெண்ணாகடத்தில் சிற்றரசராய் வாழ்ந் தவர். அச்சுதகளப்பாளர் எனும் பெயரினர். அவர் குல குருவாகிய ஸ்ரீ அருணந்தி சிவாசாரியரிடம் மகப்பேறு இல்லாக் குறையைத் தெரிவித்தபோது, அவரும் திருமுறையில் கயிறு சார்த்திப் பார்த்து "பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ளம்நினை, வாயினவே வரம்பெறுவர்" என்ற பாடல் கிடைத்தது. அதன்படி திருவெண்காடு சென்று முக்குளநீராடி வழிபட ஸ்ரீ மெய்கண்டார் அவதரித்தார் என்று குறிப்பிட்டார்கள். தலைவர் தமது தலைமையுரையில் சிவஞானபோதம் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்படவில்லை தமிழிலேயே மூல நூலாக ஸ்ரீ மெய்கண்டாரால் அருளிச் செய்யப்பெற்றது என்பதற்குத் தக்க காரணங்கள் காட்டி கா. சுப்பிரமணியப் பிள்ளை போன்ற பேரறிஞர்கள் தனி நூலே எழுதியுள்ளனர் என்றும், தமிழர்களின், சிறப்பாகச் சைவர்களின் தலைசிறந்த தத்துவ நூலை அருளிய ஆசாரியர் ஸ்ரீ மெய்கண்டார் என்றும் குறிப்பிட்டார்கள்.

எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

(கீலகஞூ கார்த்திகைமீ 1உ முதல் 29உ முடிய)

(16—11—68 முதல் 14—12—68 முடிய)

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி ९ பாதங்களும் சுபத்தைத்தரும். விவசாயம் ஓங்கும். நஷ்டதனம் வந்துசேரும். ராஜாங்கமைத்திரத்தால் அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். ஆரோக்யம் தரும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

விருஷபராசி ஒன்பது பாதங்களும் சுபத்தையே தரும். உத்தியோகம் உயரும். மேல் பதவிகள் கிடைக்கும். ஸ்தாவர ஜங்கம சொத்து கிடைக்கும். இடம்மாறி இல்லறம் ஓங்கும். மேலோர் பெரியோர் அன்பினுல் ஆஸ்தீகம் வளரும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி பலன் மிச்ரமாகும். வரவு செலவு சமனுகும். தூர பிரயாணம் கிடைக்கும். நூதன வஸ்திராபரணம் சேரும். புத்ராதிகளால் மேன்மை உண்டாகும். நடுவில் வைத்திய செலவுகளும் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகம் ஒன்பது பாதங்களும் என்றும் கண்டிராத லாபங்களை விவசாய மூலம் தரும். கிரய விக்ரயங்கள் ஏற்படும். விவகாரம் ஜயிக்கும். கடன் நிவர்த்தியாகும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். குடும்பத் தொல்லைகளும் இருக்கும். ஆனுலும் எல்லாம் சுபமேயாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி பூரா மிசிர பலனைத் தரும். வரவு செலவு சமனுகும். மனம் சதா தொல்லையை அடையும். ஜீவனம் ஓங்கும். இல்லறசுகம் ஸ்திரமாகும். வம்சவிருத்தி ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் விசேஷ நன்மைகள் தரும். சதா தெய்வ சிந்தையாகவே இருக்கும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். தேவசாந்நித்யம் தரும் ஜகத்பூரா விசாலமான கீர்த்தியை உண்டுபண்ணும். ஆரோக்கியமுண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி பூராவும் விசேஷ நன்மைகளைத்தரும். தெய்வீசும் ஓங்கும். தொழில் ஓங்கும். உத்தியோகஸ்தர்களுக்கு மேல்பதவி இடம் மாறலுடன் ஏற்படும். குடும்பசுகம் விருத்தியாகும். புத்திராதிகளால் விசேஷ நன்மைகள் உண்டாகும். தெய்வீகத் தன்மை பிரகாசிக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசியும் பூர்ணமான சுபமேயாகும். நூதன தொழில் விருத்திகள் ஏற்படும். தூர சஞ்சாரமும் உண்டாகும். அன்னியநாட்டு செல்வாக்கும் அதிகரிக்கும். ஆஸ்தீகமும் ஓங்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி மிச்ரபலனைத்தரும். இல்லறம் ஓங்கும். அதிக விரயமாகும். வைத்தியசெலவு அதிகம் காட்டும். தாமதத்தோடு சகல காரியமும் சாதிக்கும். நஷ்டமானபொருள் தானுகவந்து சேரும் சதா தெய்வ சிந்தனையாகவே இருக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் ராஜயோக போகங்களைத் தரும். மேல்பதவி ஏற்படும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். இல்லறசுகம் ஓங்கும். தெய்வீக காரியங்களால் நல்வழிகள் தோன்றும். பெரியோர் நேசமுண்டாகும். ஆரோக்யம் தரும். குடும்பம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

11. கும்பம்-அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசியும் சுபமேயாகும். இல்லறத் தொல்லைகளும் இருந்துகொண்டே இருக்கும். நூதன கிரக லாபமும் காலி கன்று சேர்க்கையும் ஏற்படும். வியவகாரம் ஜெயிக்கும். சத்ருக்கள் சரண் அடைவார்கள். உலகில் கீர்த்தி ஏற்படும். ஆரோக்யம் தரும். வியாதி நீங்கி சுபமுண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமேயாகும். உத்தியோகத்தில் மேல் பதவிகளும் நஷ்டதனம் சேருதலும், குடும்பசுகம் ஓங்குதலும் மேலோர் பெரியோர்களின் அன்பும் ஆசியும் கீர்த்தி பத்திரமும் தான தர்ம பல பிராப்திகளும் தேவதா குருபக்தியும் ஆரோக்கியமும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேருதலும் ஏற்படும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

குறிப்பு :- மேல்கண்ட பலன்கள் யாவும் தசாபுத்திகளும் சரியாய் இருந்துவிட்டால், பூர்ண பலனைத்தரும். கோசாரம் மாத்திரம் சுபமானால் முக்கால் பலன் ஏற்படும். தெய்வ சிந்தகர்களுக்கு சதா சுபமே உண்டாகும். கடவுள் துணை.

கார்த்திகை மாதத்திய விசேஷ குறிப்புக்கள்

ஸ்ரீமான்கள் கனதனவான்கள் ஆஸ்தீக ஜனங்கள் தர்மிஷ்டர்கள் குருமார்கள் எல்லோருக்கும் மிகுந்த வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்வதாவது, உலகில் எல்லோருமே சர்வக்ஞனல் ஆனாலும் எனது ஜோஸ்ய ஆராய்ச்சியில் விளங்கக்

கூடியவைகளை பயத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாளது கார்த்திகைமீ 1உ முதல் மார்கழிமீ 8உ முடிய கன்னியாராசியில் செவ்வாய், கேது, குருவும், அதற்கு 7ல் மீனத்தில் சனி ராகு சேர்க்கையும் 23உ முதல் கார்த்திகை மாதத்தில் மூன்று நாளைக்குக் கடகத்தில் சந்திரனும் அதற்கு 7ல் மகரத்தில் சுக்கிரனும் சேருகிறபடியால் சென்ற ஐப்பசியில் இருந்த பயங்கரமான சூசனைகளைக் காட்டி அந்த பயத்தை மேல் கண்ட பெரியோர்களாலும் ஸ்ரீ குருமார்களாலும் உலக க்ஷேமத்தின் பொருட்டு தென்னாட்டில் (தஞ்சாவூர் ஸ்ரீ காஞ்சி மண்டலத்திலும்) நடத்திவருகிற ஸ்ரீ சதசண்டி ஸ்கஸ்ரசண்டீ அதிருத்திர மகாருத்திரம் லக்ஷ கோடி அர்ச்சனைகள் மூலமாய் தேவ கோபம் தணிந்து டிபயத்தை தூரத்தில் போகும்படி செய்து விட்டார்கள். அதே சக்தியானது மறுபடியும் நாளது கார்த்திகை மாதம் 20உக்குமேல் 30உக்குள் வரப்போகும் அதி பயங்கரமான பிரசண்டவாதம் அதிவிருஷ்டி அகால விருஷ்டி முதலியவைகள் இலங்கையில் உருவாகி அயோத்தியில் போய் முடிவடையும். அதற்கு மத்தியில் உள்ள அதர்ம பிரதேசங்களைத் தாக்கும். அந்த பயத்தை முதல்கண்ட சக்திகள் முன்நின்று விலக்கி பயத்தை போக்கி உலகில் அமைதியும் சுபிக்ஷமும் தன தான்ய விருத்தியும் கொடுத்து உலகை ரக்ஷிக்க பிரார்த்திப்போமாக. அதர்மத்துக்கு முக்கிய காரணங்கள் மாநிட ஜன்மாவில் யௌவனம் விசேஷமான தனயோகம், யஜமானத்துவம் நாத்தீகம் இந்த நான்கும் ஒன்று சேராமல் இருந்தாலே உலகத்துக்குப் பயமே இல்லை. சமஸ்த மங்களமும் உண்டாகும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

" ஞானசம்பந்தம் "

இருபத்தேழாவது ஆண்டு மலர்ப்

பொருளடக்கம்

எண்		பக்க எண்
1	அஞ்சும் ஆறும்	561
2	அப்பரும் அசவையும்	159
3	அமுரிதாரணே	407
4	அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லே	476, 530
5	அறநெறியும் அருள்நெறியும்	136, 195, 242, 329, 378, 442, 501
6	அன்புக் கோயில்	596
7	இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாகாடு	89
8	இராஜராஜசோழன்	538
9	இருபத்து ஆறும் ஆண்டு மலரின் பொருளடக்கம்	46
10	இருபத்து ஏழாம் ஆண்டு மலரின் பொருளடக்கம்	621
11	இலவச சித்தவைத்யசாலே	27, 127, 229, 432
12	ஈழமும் தமிழும்	106, 154
13	எடுத்தபாதம்	246
15	எதிர்காலம்	43, 74, 130, 185, 233, 274, 330, 369, 434, 493, 558, 617
16	ஒலிவிழா	189

எண்		பக்க எண்
14	ஒளிவிளர்விளக்கு	1
17	கடலாட்டு	133
18	கண்ணீரில் மலர்ந்த கவிதை	334, 389
19	கந்தவிரதம்	497
20	கலைவளர் மாளிகை	167, 213, 347, 391, 458, 513, 600
21	கனவினுல் விளைந்தது	311
22	குருவருளும் திருவருளும்	277
23	கூட்டுப்பண்ணை	309
24	கூத்தன்றன்கூத்து	iii
25	கொழிதமிழ்க்கூடலில் கொன்றைவேணியான்	163, 208, 262, 351, 400. 464, 526, 583
26	சந்திரன்	411 480, 534
27	சித்தாந்த வினுவிடை	14. 103, 149. 253, 288, 341, 383, 448, 508, 573
28	சிவகர்ணுமிருதம்	93
29	சிவப்பெருக்கும் சித்திரை	237
30	சிவாகமஸார ஸர்வஸ்வம்	114, 170 217, 356, 415, 468, 522, 609
31	சூரியன்	23, 60
32	செவ்வாய்	586
33	செய்திகள்	38, 72, 124 184, 225, 268. 326 366, 430, 485, 552, 609
34	சென்றுடு தீர்த்தங்கள்	77
35	ஞானப்பூ	295
36	தருமையாதீனத்திற்கு மாண்புமிகு, வி வி, கிரி அவர்கள் விஜயம்	203
37	தாய்மையின் சிறப்பு	404

எண்		பக்க எண்
38	திருக்குறளும் திருநாவலூரரும்	7
39	திருக்குறளும் மெய்கண்டநூல்களும்	81
40	திருத்தக்கதேவரின் உவமை நயம்	303
41	திருத்தொண்டர் வரலாறு	119, 145, 257, 425, 519
42	திருநள்ளாற்றின் பெருமை	419
43	திருநெறிய தெய்வத்தமிழ்மாநாடு	322
44	திருப்பணிகைங்கர்ய வேண்டுகோள்	173
45	திருப்பனந்தாள் மகாகும்பாபிஷேகம்	362
46	திருமூலரும் தாயுமானவரும்	30
47	திருவிழாத் தத்துவங்கள்	249
48	தையல்நாயகி அந்தாதி	xiv, 99, 296
49	நாற்கவி மங்கலம்	143
50	நானிலத்தோர்தொழும் நாகபூஷணி	20
51	நிலாப்போதுமுடிக்கும் நெடுமுடி	96
52	பழிவளர்க்கும் செவிலி	55
53	பாணன் படும்பாடு	300
54	பார்! உழவின் பெருமை	59
55	புதுமைக்கு	579
56	புத்தாண்டு வாழ்த்து	194
57	பெருஞ்சாந்தி	325
58	பொங்கல் வாழ்த்து	i
59	பொன்னியின் புகழ்	373
60	மாண்புமிரு வி. வி கிரி அவர்களுக்கு அளித்த வரவேற்புமடல்	200
61	வழிபாட்டுக் குழுவினரின் தலயாத்திரை	40
62	வள்ளுவரும் வாதவூரரும்	ix
63	விண்ணும் மண்ணும்	437

..

எண்		பக்க எண்
64	விளக்கில் விளக்கு	110
65	விளையாட்டும் விழுப்பொருளும்	49
66	வேளூர்க்கிருத்திகை அபிஷேக விபரம்	224
67	வேளூர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி வேண்டற்பா	421
68	வேளூர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி பதிகம்	604
69	வேளூர் ஸ்ரீ வைத்தியநாதர் பதிகம்	472
70	வேனில்	221, 265
71	வைத்தீஸ்வரன்கோயில் (புள்ளிருக்கு வேளூர்) தலவிளக்கம்	178
72	ஜ்யேஷ்டா தேவி	315
73	ஸ்ரீஞானாம்பிகா சமேத ஸ்ரீஞானபுரீஸ்வரசுவாமி மகோத்சவப் பத்திரிகை	i
74	ஸ்ரீவெள்ளியம்பலவாணத் தம்பிரான்	65
75	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் வழங்கியருளிய வாழ்த்துரை	க
76	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளுரை	358 453
77	Hon'ble Sri. V. V. Giri Speech	205

தருமையாதீன முதற்குரவர்
ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்
குருபூஜை விழாவில்



25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டணப்பிரவேசக் காட்சி.

" ஞானசம்பந்தம்

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்.

உள்நாடு ரூ. 3—00. வெளிநாடு ரூ 4—00

செயலாளர்,
" ஞானசம்பந்தம் " காரியாலயம்.
தருமபுரம். மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருப்பனந்தாள்
ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில்

ஸ்ரீ பிருகந்நாயகி சமேத
ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமிக்கு

பரிவாரங்களுடன்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன
மகாகும்பாபிஷேகம்

5—7—68

2—7—68	செவ்வாய்க்கிழமை	மாலை யாகசாலாப்பிரவேசம். யாக பூஜை காலம் 1.
3—7—68	புதன்கிழமை	காலை மாலை யாக பூஜைகள் காலம் 2.
4—7—68	வியாழக்கிழமை	காலை மாலை யாக பூஜைகள் காலம் 2. காலை மணி 11-15 க்குமேல் 12-30 க்குள் கன்யா லக்னத்தில் பரிவார மூர்த்திகள் மகாகும்பாபிஷேகம்.
5—7—68	வெள்ளிக்கிழமை	காலை யாக பூஜை காலம் 1. சுவாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் சிம்ம லக்னத்தில் காலை மணி 9-30 அளவில் மகா கும்பாபிஷேகம். மாலையில் மகாபிஷேகம். இரவு பஞ்சமூர்த்திகளின் திருவீதி உலாக் காட்சி.

குறிப்பு :— வேத சிவாகம பாராயணம், திருமுறைப் பாராயணம், சமயச் சொற்பொழிவுகள் முதலியன நடைபெறும்.

Printed & Published by. K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram (Mayuram) 10—6—68.